அறிவுக்கொடி வெளியீடு நெ. 2

பரிதாபத்திற்குரிய

# பஞ்சமர்கள்.

53
02

அறிவுக்கொடி [illegible]ப்பகம்,
கும்பகோணம். (விலை 1 அணா.)

பரிதாபத்திற்குரிய

# பஞ்சமர்கள்.

ஆக்கியோன்
K. ராமையா, சித்தர்காடு.

"அறிவுக் கொடி" பதிப்பகம்,
கும்பகோணம்.
1938

T021153
Sarasvathi Mahal Library, Thanjavur

முன்னேற்றம்
பிரஸ்,
கும்பகோணம்

# முன்னுரை.

தமிழ்நாட்டில் உள்ள தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் உண்மையான கஷ்டநிலையைத் தெளிவாக இந்நூலில் விளக்கிக் காட்டப் பட்டிருக்கின்றது. இதை ஒருமுறை படித்தால் "ஆண்டை'மார்கள்" என்னும் மிராசுதார்கள் அவர்களை எவ்வளவு கொடுமையாக நடத்துகிறார்கள் என்பதை உணரலாம். இந்நூல் ஆரம்பத்தில் "குடி அரசு" பத்திரிகையில் கட்டுரைகளாக வெளி வந்துள்ளது. இதனைப் புத்தக உருவில் வெளியிடுவதனால் மிகுந்தபயனளிப்பதாகும் என்று கருதியே வெளியிடுகிறோம். இத்தனைப் புத்தக உருவில் வெளியிடுவதற்கு அனுமதித்த "குடி அரசு" ஆசிரியர்க்கும், கட்டுரை ஆசிரியர்க்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கும்பகோணம். }
1—6—38 }

"அறிவுக்கொடி"
பதிப்பகத்தார்.

## பொருள் அட்டவணை பக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | சேரிகளின் பரிதாபநிலை | 1 |
| 2. | குந்தக் குச்சில்லை | 4 |
| 3. | கொஞ்சக் கூலியும் கொள்ளை | 6 |
| 4. | அதைப்பிடுங்கும் அங்காடிச் சனியன் | 8 |
| 5. | ஆடிக்காற்றில் அவதிப்படும் காட்சி | 10 |
| 6. | ஐப்பசியில் படும் அவதி | 12 |
| 7. | கஞ்சிகாய்ச்சும் காட்சி | 16 |
| 8. | தானியம் குவியும் தைமாதம் பிறக்கும் | 18 |
| 9. | தாகந்தீரவும் தண்ணீரில்லை | 20 |
| 10. | ஆண்டை வீட்டு ஆச்சிமார்களோ! | 22 |
| 11. | திருமணக்காட்சி. | 24 |
| 12. | பிள்ளைப்பேறு | 26 |
| 13. | ஆரம்பக்கல்வி | 27 |
| 14. | பஞ்சமர்களிலும் பலஜாதி | 31 |
| 15. | எலிவளை தோண்டும் பரிதாபம் | 34 |
| 16. | நல்லபெயர் வைத்துக் கொள்வதும் பாவமாம்! | 37 |
| 17. | விடுதலைக்கு வழியென்ன? | 40 |

# பரிதாபத்திற்குரிய பஞ்சமர்கள்.

## 1. சேரிகளின் பரிதாப நிலை.

இவ்வகுப்பினர் பெரும்பாலும் கிராம வாழ்வையே தழுவியவர்கள். இவர்கள் வாசத்தின் நிலை மிக மிகக் கேவலமானதாகும்; சுகபோகமனுபவிக்கும் உயர்ஜாதியினர்களோடு கடுகளவும் சம்பந்தமில்லாமலே சகல துறைகளிலும் தனித்து ஒதுக்கித் தள்ளப்பட்டிருக்கும்; என்றாலும் பஞ்சமர்களின் இராப்பகல் உழைப்பினால் கிடைக்கும் ஊதியத்தைக் கொள்ளை கொள்வதில் மாத்திரம் உயர் ஜாதியினர் நெருங்கிய சம்பந்தம் வைத்துக் கொள்வார்கள்; அதற்குத் தீட்டு கிடையாது; சண்டாளத்துவம் கிடையாது. பஞ்சமர்களின் வாழ்வுக்கு அவசியமான குடியிருப்பு வசதிகள் எல்லாம் கிராம எல்லை ஓரத்தில் ஒதுக்கி அமைக்கப் பட்டிருக்கும். இந்த இடத்துக்குப் "பறைச்சேரி, பள்ளச்சேரி" என்ற திருநாமம் சூட்டப்பட்டிருக்கும். பொதுவாகவே சேரிகள் என்பதற்கு ரோட்டு வசதிகள் இரா. மாரிக் காலத்தில் வெள்ளக் கஷ்டமும், கோடைகாலத்தில் குடி தண்ணீர்க் கஷ்டமும் அவர்கள் சேரியைக் கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறது. எல்லாக் கிராமத்திலும் பிணம் புதைப்பதற்கு கிராம எல்லையில் சுடுகாடு இருப்பது போலவே பறைச்சேரிகளும் அமைக்கப் பட்டிருக்கின்றன. சுடுகாட்டில் எப்படி எலும்பும், குப்பை கூளங்களும் குவிந்து ஆபாசம் நிறைந்ததாகக் காணப்படுகிறதோ, அதே போல் பறைச்சேரியிலும் எலும்பும் குப்பை கூளங்களும் நிறைந்து கிடக்கும். உயர் ஜாதியினர்களுக்குப் பிணம் புதைப்பதற்கு எப்படி சுடுகாடுகள் பிரயோஜனப்படுகிறதோ அதே மாதிரி பறைச்சேரியும் உயர் ஜாதியினருக்கு உழைத்துக் கொட்டும் அடிமைகளான நடைப்பிணங்கள்

## 2 குந்தக் குச்சில்லை.

பஞ்சமர்களுக்கு எந்த வசதியுமில்லாமல் அஞுதியான இடத்தில் வாசஸ்தலம் அமைத்துக் கொடுத்திருக்கும் கொடுமையை முன்சொன்னோம்! அந்த ஆபாசம்பொருந்திய 6அடி நிலமாவது அவர்களுக்குச்சொந்தமாஎன்றால் அதுவுமில்லை. இந்த 6அடிநிலமும் அடிமை வேலைக்கென்ற கட்டாயத்துக்காகக் கொடுக்கப்பட்ட இடமாகும். இந்த இ;வல் மனையில் கட்டியிருக்கும் ஒட்டைக் குச்சுகளின் நிலை எல்லாருக்கும் தெரியும். கூறையின் மூங்கில், முன்னும், பின்னும், நன்றாய்த் தெரியும்படியான—சரிந்து போனதும் இடிந்துபோய்க் கொண்டிருப்பதுமான மண் சுவர்களுடனும் கூடிய ஆபாசம் நிறைந்த குச்சுகளே அங்குகாணப் படுகின்றன. அவ்வாபாசக் குச்சுகளும், அவர்களுக்குச் சொந்தமில்லை என்றால் அவர்கள் பரிதாபத்தை அதிகம் விவரிப்பானேன்.

நூற்றுக் கணக்கான வருஷங்களாக ஏக்கம், வறுமை இவற்றின் சின்னங்களே பிரகாசிக்கும் முகங்களுடன் கிழிந்த அழுக்கடைந்த கந்தல்களைத் தரித்துக்கொண்டிருக்கும் பரிதாபத்துக்குரிய பஞ்சமர்களுடைய தேகமாவது அவர்களுச்குச் சொந்தமா என்றால் அதுவுமில்லவே இல்லை. தன் தேகத்தையும் மிராசுதார் என்று சொல்லப் படுகிறவர்களுக்கு 40—50 ரூபாய்க்கு அடமானம் செய்துகொடுத்து விடுவார்கள். இவர்கள் அடமானம் செய்து கொடுக்காவிட்டாலும் அவர்கள் (மிராசுதார்கள்) அடமானம்செய்து வாங்கிக் கொள்வார்கள். இந்த அடமானத்துக்கு ஆதாரமாக அடிமைஓலை, அடிமைச்சாசனம், உழவடைப்பத்திரம், வெண்ணலைக் கடன் பத்திரம் போன்ற பத்திரங்களை எழுதி வாங்கிக் கொள்ளப்படும். ஆகவே உடலும் சொந்தமில்லை. ரூபாய் 40—50க்குத் தங்கள் உருவத்தையே ஆண்டைகளுக்கு அர்ப்பணம் செய்து விடுவதால் அவர்களை உழைக்கவே பிறந்திருப்பதாக மிராசுதார்கள் கருதிவிடுகின்றார்கள்.

பஞ்சமத் தோழர்களும் தாம் உழைக்கவே பிறந்திருப்ப தாகக்கருதுகிறார்களே தவிர ஊதியத்தைப் பற்றிக்கவலை கொள்வதேகிடையாது; கவலை கொள்ளுவது பாபமாகவுங் கருதப்படுகிறது.

"பறைவயிறு அரைவயிறு" என்ற ஒரு சுலோகமும் உண்டு. இவர்கள் உழைப்புக்குக் கொடுக்கும் ஊதியம் வெகு விந்தையானது. இவர்களுக்கு வேலை செய்த நாளைக்கு 2படி நெல் சம்பளமாகக் கொடுக்கப் படுகிறது. அதாவது பட்டணம் படிக்கு ஒருபடிநெல்லாகும். இதுதவிர மிராசுதார்களுக்கு அடிமைப் பட்டவன் என்ற தனிச்சுதந் தரத்துக்காக, ஆண் அடிமைக்கும் பெண் அடிமைக்குமாகச் சேர்ந்து 75குழிநிலம் அதாவது 25 செண்டுநிலம், மானியம் கொடுக்கப் படும். இந்தநிலத்தில் 5கலம் வருமானம் வரு ஷம் ஒன்றுக்கு கிடைக்கும். களவடி சாட்டுவா என்ற பெயராலும், போரடி போலியடி என்ற பெயராலும் வரு ஷம் ஒன்றுக்கு 5கல நெல்லும் ஆக வருஷ வருமானம் சம்பளத்தை அல்லாமல் மொத்தமாகக் கிடைப்பது 10கல நெல்லாகும். இது ஒரு வேலி நிலம் சாகுபடி செய்யும் ஒரு பண்ணையாள் குடும்பத்தின் மொத்த வரும்படியாக இருக்கிறது.

ஆணும் பெண்ணுமாக ஒரு குடும்பம், ஒருவயது வந்த பிள்ளையோடிருப்பதாக வைத்துக்கொண்டாலும் ஒருவேலி நிலம்தான் சாகுபடி செய்யலாம். இந்த முறையில் கிடைக் கும் வருமானத்தில் தான் அவர்கள் வாழ்வை நடத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் எவ்வளவு குழந்தையும், குஞ்சுமாய் இருந்தாலும் இதைக்கொண்டு சாப்பிட வேண் டியதுதான். இந்த மொத்த வருமானத்தை ஆண்டை மார்கள் எக்காலத்திலும் கொடுப்பதில்லை. கலம், தூணி, பதக்காய் கொடுத்துப் பற்று வழிசெய்வார்கள். இப்படிச் சில்லறையாக கொடுக்கப்படும் நெல்லெல்லாம் போர்அடி,

பொலியடி, கருக்காய்ப் பட்டரை தூற்றின நெல், போன்ற பிரயோஜனப் படாத மட்ட நெல்லைத்தான் கொடுப்பார்கள்.

எந்தத் தொழில் ஸ்தாபனங்களிலும் வேலை நேரம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் அடிமைப் பஞ்சமர்களுக்கு 24 மணிநேரமும் வேலைதான். ஆண்டைகள் அழைத்த நேரமெல்லாம் ஆஜரிலிருக்க வேண்டும். ஆகவே அவர்களுக்கு இரவும், பகலும் இடைவிடாஉழைப்புத்தான். இந்தச் சமூகமே ஒரு கேள்வியற்ற சமூகமென்று சொல்லலாம். இவர்களுக்குக் கொடுக்கும் கூலியைப் பற்றிச் சொன்ஞேம். அடிமை என்ற தனிச் சுதந்தரத்துக்காகக் கொடுக்கப் படுகிற வருமானத்தையும் சொன்ஞேம். இனி இந்தக் கொஞ்சக்கூலியிலும்கொள்ளை அடிக்கும் மிராசுதார்களின் கல்மனதைப்பற்றிக் கொஞ்சம் விவரிப்போம்.

## 3. கொஞ்சக் கூலியும் கொள்ளை.

ஆதிதிராவிடர்களின் மகத்தான உழைப்புக்குக் கொடுக்கும் மிகக்கொஞ்சமான கூலியிலும் ஆண்டைகள் அடிக்கும் கொள்ளை மிகப் பரிதாபகரமான காட்சியாகும். பொதுவாக வாயில்லாப் பூச்சிகளான தாழ்ந்தவர்களின் வயிற்றில் அடிக்கும் கொடுமையைச் சமதர்ம உலகம் காரி உமிழ்ந்து கொண்டிருக்கும்போது அவர்களுக்குக் கொடுக்கும் கொஞ்சக் கூலியிலும் கொள்ளை அடிக்கும் கொடுமைதான் என்ன! ஏழைகளை வதைத்தா மானங்கெட்ட மனுஷத்தனமென்ற பெயரெடுக்க வேண்டும்? எல்லாப் பண்ணைகளிலும் கூலி போடுவதற்கென்று ஒரு தனி மரக்கால் இருக்கிறது. அதற்குக் கூலிமரக்கால் என்று பெயர். சர்க்கார் முத்திரை மரக்காலால் அளக்கும்ஒருகல நெல்லைக் கூலி மரக்கால் என்பதால் அளந்தால் 1¼ கல நெல் இருக்கும். சர்க்கார் அளவைவிட 3 மரக்கால் வேன் வைத்துச்

சின்னப்படியால் கூலி கொடுப்பதென்ற பழக்கம் 100-க்கு 99-பண்ணைகளில் இன்றும் நடந்து வருகிற பழக்கமாகும். இதை இல்லையென்று எந்த மிராசுதாரனும் சொல்லமுடியாது. பஞ்சம சகோதரர்களுக்குத்தினம் 2படி கூலியென்ருல் அது முக்கிரைப்படிக்கு ஒன்றேமுக்கால்படி நெல்தான் இருக்கும். இப்படி எல்லா வருமானத்திலும் சின்னப்படி அளவால் மிராசுதார் கொள்ளை கொள்வதின் மூலம் பஞ்சமர்களை வயிற்றில் அடிப்பது ஒரு வழி.

தாழ்ந்தவர்களைச் சதா சர்வகாலமும் தரித்திரர்களாகவும், பசிப்பிணியாளராகவும் மிராசுதார்கள் வைத்துக்கொண்டிருப்பதனுல் கொடுத்ததை ஏதோ லாபமென்று கருதி வாங்கிப்போவதைத் தவிர வேறு அவர்களுக்கு வழியில்லை. தங்களுக்கு (பஞ்சமர்களுக்கு)சின்னப்படிபோட்டுக் கூலி கொடுப்பதைப் பகிரங்கமாகத் தாழ்ந்தவர்கள் அறியாமலும்இல்லை. அறிந்தாலும் அக்கொடுமையையும் நியாயம் என்றே கருதிவிடுகிருர்கள். தங்களுக்கு ஞாயமான உரிமைகளையும் மிராசுதார்கள் பறிப்பதை நியாயமென்று நினைப்பதோடு அதை எதிர்த்துக் கேட்டாலும் மகா பாதகம் சம்பவிக்கும் என்று கருதுகிருர்கள். கொடுத்ததை வாய்மூடி மௌனியாய் வாங்கிப்போவதே புண்ணிய கைங்கர்யமாகக் கருதுகிருர்கள். தங்களுடைய பசி, தாகம், கொடுமை, சுகாதாரமின்மைபோன்ற கஷ்ட நஷ்டங்களைப் போன ஜென்மத்தில் செய்த பாவத்தால் ஏற்பட்டதென்று அவர்கள் அசட்டுத்தனமாய்க் கருதிக் கொண்டிருக்கிருர்கள். ஆதலால் உயர் ஜாதியினர்களான மிராசுதார்கள், செய்யும் கொடுமைகளைப் பற்றிக் கேட்டுவிட்டால் மறு ஜென்மத்தில் இன்னிலை எற்பட்டு விடுமோ என்று பயப்படுகிருர்கள். தங்கள் உழைப்பால் மிராசுதார்கள் அனுபவிக்கும் சுகபோகத்தைக் கடவுள் அம்சமென்றும், போன ஜென்மத்திலும் அவர்கள் செய்த புண்ணிய வசத்தால் தங்களைக் கொடுமைப்படுத்தும் கீர்த்திக்கு ஆளானர்கள் என்

றும் நினைத்துக்கொண்டிருப்பதால் அவர்கள்கொடுமைப்படு கிறவர்களானதில் ஆச்சர்யமொன்றுமில்லை. ஆகவே கொஞ்சஊதியத்தையும்கொள்ளை அடித்துக்கொள்ளும்மிரா சுதார்களின் கீர்த்தி ஒரு பக்கமிருக்கட்டும், அவர்கள் கொடுக்கும் கொஞ்சக்கூலியும் எக்கதியாவதென்பதைக் கவனியுங்கள்.

## 4. அதைப் பிடுங்கும் அங்காடிச் சனியன்கள்.

அவசரம், அவசரமாக ஒன்றுக்கு முக்காலாய் வாங்கி வரும் கூலியை வழிமறித்துப் பறித்துக்கொள்ளும் தொழி லாகக்கொண்ட ஒரு கூட்டம் எல்லாக் கிராமத்திலும் நிரந் தரமாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. அக்கூட்டந் தான் அங்காடிக்கடை என்பது. இந்த அங்காடித் தொழி லைச்செய்பவர்கள் பெரும்பாலும்பெண்களாகவே இருப்பார் கள். பக்காப்படி (பெரியபடி) போட்டு பஞ்சமர்களின் நெல்லை ஏமாற்றிப்பறித்துக்கொள்வதில் இவர்கள்மகாவில்லி கள். அவசரத்தில் கூலிபெற்றுவரும் பரிதாபத்துக்குரிய பஞ் சமர்கள் அங்காடிக்கடையில் சிக்குவார்கள். உழைத்த தற்குக் கூலியோ மிகக்கொஞ்சம். அக்கொஞ்சக் கூலியி லும் ஆண்டைமார்கள் அடித்துக்கொண்டதுபோக பாக்கி இருக்கும் கொஞ்சக் கூலியை அங்காடிப் புண்ணியவதிகள் புடைப்பார்கள், கொழிப்பார்கள், தூத்துவார்கள், கீழே பாதி, மேலேபாதி, மடியில் பாதி இரைத்துக் கொள்வார் கள். இறுதியாக சர்க்கார் முத்திரை மரக்கால் ஒருமரக் கால் காணும்படியான நெல் கொண்டுவந்து கொடுத்திருந் தால் சின்னப் படிக்கு 2½படி நெல்தான் கண்டதாகச் சொல்லி காசு கொடுப்பார்கள். பாக்கி 1½படி நெல்லும் பக்காப்படி விழுங்கிவிடும். கள்ளுக்கடையை நினைத்துக் கொண்டிருப்பதால் அங்காடி அம்மைகள் கொடுத்தது போதுமென்று அவர்களுக்குப் புண்ணியவதிகள் பட்டம் கொடுத்து விட்டுப் போய்விடுவார்கள். அவர்கள் கொடுத்த

காசும் கள்ளுக்கடைக்கும் சாக்கணுக்கடைக்கும் போய்ச் சேர்ந்து விடும்.

இந்த அங்காடித் தொழில் புரிவதில் சில வினையமுள்ள பெண்மணிகள் இருக்கிருர்கள். அவர்களுடைய அங்காடித் தொழில் வெகு விசித்திரமானதாய் இருக்கும். வாயில்லாப் பூச்சிகளான தாழ்ந்தவர்களின் சொற்ப ஊதியத்தைத் தக்க லாபத்துடன்பெறும் பொருட்டு, முன்கூட்டியேகடன் கொடுத்து வைப்பார்கள். இப்படிக் கடன் கொடுக்கும் விஷயத்தைத் தாழ்ந்தவர்கள் தங்கள் மேல் அவர்கள் கருணை கொண்டு, தங்கள் கஷ்டத்திற்குச் சகிக்காதவராய் மனமிரங்கி உதவி செய்தார்கள் என்று எண்ணிக் கொள் வார்கள். ஆனுல் இந்த அங்காடிக்காரர்களோ ஆதிதிரா விடர்கள் கூலி வாங்கக் காத்துநிற்கும் ஆண்டை வீட்டுக் குப் பக்கத்தில் பக்காப்படியும், கூடையும் கையுமாக அசை யாமல் அமர்ந்து விடுவார்கள். கடன் வாங்கியவர்கள் தாங்கள் ஆண்டை வீட்டில் வாங்கும் கூலியை இந்த அங்காடி அம்மைக்கு அர்ப்பணம் செய்து விட்டு வெறுங் கையுடன் வீடுதிரும்புங் காட்சி வெகு விந்தையானது. முன் கூட்டிக் கடன் கொடுப்பவர்களுக்கும், ரொக்கம் கொடுத்து வாங்குகிறவர்களுக்கும் என்ன வித்தியாசமென் ருல், ரொக்கம் கொடுத்து வாங்குகிற அங்காடி ராணிகளை விட, கடன்கொடுத்த வில்லிகள் கொஞ்சம் பெரியபடியாய்ப் போட்டு அளந்து கொண்டால் கேள்வியில்லை என்பதுதான். இவர்கள் முன்னுடி காசு கொடுத்ததற்காகத் தனியாகக் கொண்டாடும் பாத்தியம் இதுதான்.

இந்த வீரப் பெண்மணிகள் இந்த அங்காடித் தொழில் புரிவதற்காகக் கிராமத்தில், லைசென்ஸ் பெறுவதற்கு ஒரு கூட்டமிருக்கிறது. லைசென்ஸ் பெறுவதென்ருல் சர்க்காரில் பெறுவதல்ல. அங்காடிக்கடை ஒன்றுக்கு இவ்வளவு ரூபாய்க் கிராமப் பொதுமணியக்காரன், தலையாரிபோன்ற

கூட்டத்தாருக்குக் கொடுத்து வாய் முட்டுப் போட்டு விட்டால் அங்காடிப்படியை எப்படிப்போட்டு அளந்து கொண்டாலும் கேள்விமுறை யில்லை. இதுதான் எல்லாக் கிராமங்களிலும் இன்று நடந்து வருவதாகும். பக்காப்படி (அதாவது சர்க்கார் முத்திரைப் படியை மீறின படி) ஸ்தாபனம் எல்லாக் கிராமங்களிலும் பகிரங்கமாக நடைபெறும் ஸ்தாபனமாகும். எல்லாக் கிராமத்துக்கும் கிராம அதிகாரி இருக்கிறார். பக்கத்தில் போலீசும் இருக்கிறது. என்ன இருந்தால் என்ன? பிரஸ்தாப பக்காப்படிஸ்தாபனம் ஏழைப் பஞ்சம சகோதரர்களுக்குச் செய்யும் அநீதியையும், கூலியில் கொள்ளை கொள்ளும் ஆண்டைமார்களின் அநியாயத்தையும் கேட்க நாதியற்று விட்டது. மிராசுதார்கள் வீட்டில் கன்னம் வைத்து விட்டால் ஓடிவருகிற போலீஸ் இந்த அநீதியைக் கவனிக்க வேண்டாமா? இந்த அநீதிக்குச் சர்க்காரும் செவிசாய்ப்பதில்லை.

## 5. "ஆடிக்காற்றில் அவதிப்படும் காட்சி"

ஆடிமாதத்தில் ஆறுகளில் இருகரையும் தண்ணீர் புரண்டுவர ஆரம்பித்து விட்டது. வேசிவீடேகெதியென்று கிடந்த ஆண்டைமார்களும், சீட்டாடிக் கொண்டிருந்த ஆண்டைகளும், சீசனுக்குப் போயிருந்த ஜமீன்களும், பட்டணத்தில் கிடந்த பண்ணைகளும் ஈசல் கிளம்புவது போல் வெளியில் கிளம்புவார்கள். சில சோம்பேறி ஆண்டைகள் காரியஸ்தனிடம் சொல்லி விட்டு வேசி வீட்டிலேயே இரண்டறக் கலந்து விடுவார்கள். சிலர் எலெக்ஷன் விறுவிறுப்பிலிருப்பார்கள். இவர்களுடைய நிலை ஆடம்பரத்தனத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் ஆதிதிராவிடர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு ஆடியில் பிடிக்கும் சனியன், சித்திரை இறுதியோடுதான் முடியுமோ என்னமோ சொல்லமுடியாது. இந்தக் காலமெல்லாம் அவர்களுக்கு இடைவிடா உழைப்புத்தான்.

இராப்பகல் ஊதியமில்லாமல் உழைக்கும் தொந்தர வோடு, இடை இடையே சில அகங்காரம் பிடித்த ஆண்டை மார்கள் உதைகள் கொடுக்கும் விந்தை வேடிக்கையானது. புளியம்மிலாறு பூசரம் மிலாறு இவைகள் கொண்ட பூசை நிகழும். சாட்டையடியு முண்டு. பஞ்சம சகோதரர்களை அடிப்பதில், உதைப்பதில் விசேஷம்நிறைந்த தனி ஜோர் ஒன்றிருப்பதாகச் சிலமிராசுதார்கள் நினைத்து அடிக்கடி உதையை உபயோகப் படுத்துவதும் உண்டு. இந்த உதைகள் ஆண்களுக்கு மட்டுமல்ல. ஆதிதிராவிட பெண் களுக்குமுண்டு. அடி வலுவாய் விழுவதற்காகப் பெண் மக் களின் மார்புத் துணியையும் எடுக்கச்சொல்லி மானவெட்க மில்லாமல் அடிப்பார்கள். ஆதிதிராவிட சகோதரிகள் மார் துணி போட்டாலே அவர்கள் அடிமைத்தனத்தில் ஏதா வது ஓட்டை கண்டுவிடுமோ என்று மிராசுதார்கள் எண்ணு வதுமுண்டு. இந்த மனப்பான்மை காரணமாகச் சிலகிராமங் களின் ஆதிதிராவிட பெண்மணிகள் எவ்வளவுபால்யத்தசை யாய் இருந்தாலும் மார்பில் துணி போடாமலேயே வேலைகளுக்குப்போவதென்ற பழக்கம் இன்றும் நடந்து கொண்டிருக்கிறது. இவர்கள் ஆடியில் சேற்றில் இறங்கி ஞல் கார்த்திகை வரை சேறும் உடலுமாக வாழவேண்டிய வர்கள் தான். பஞ்சம சகோதரிகளுக்கு நடவு போடுவது, களை எடுப்பது போன்ற வேலைகள்தான் அவர்கள் வேலை செய்த தினத்துக்கு 2படி நெல்தான் சம்பளம் கொடுக்கப் படும். பஞ்சமப்பெண்களுக்குப் பொதுவாக "நடவாள்கள்" என்ற பட்டப் பெயரையே அமுலுக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.

o
o
o

தானியம் குவிந்த தை மாதத்தில், ஆடிமாத சாகுபடிக் கென்று, தசுகூலி நெல், கட்டுக்கடை செய்யப்பட்டிருக்கும். இந்தத் தசுகூலி நெல் புரட்டாசி ஐப்பசிமாதம் குருவை அறுக்கும் வரை வேண்டிய அளவுக்குத் தான் கட்டப்பட் டிருக்கும். பஞ்சமர்களுக்குக் கூலிகொடுப்பதற்கு வாரத்

துக்குஇரண்டுநாள் குறிப்பிடப்பட்டிருக்கும். அதற்குக் கூலி முறை என்று சொல்லப்படும். வேலைக்காலத்தில்வாரத்துக்கு ஒருநாள் கள்ளுக்கு இனும் கொடுப்பதென்ற பழக்கமுண்டு. இதுதான் மிராசுதார்களின் மதுவிலக்குப் பிரசாரம். வாரத்துக்கு ஒருமுறை கள்ளுத் தண்ணிக்கு இனும் கொடுப்பதாக மிராசுதார்கள் சொல்லிக்கொண்டாலும் அவர்களுக்குக் கைநஷ்டமில்லை. கள்ளுக்கு இனும் கொடுக்கும் நெல் ஆதிதிராவிடர்களுக்குக் கிரமமாகக் கொடுக்கும் கொஞ்சக் கூலியில் சின்ன மரக்கால் போட்டு அடிக்கும் கொள்ளை வகையில் விழும் துண்டு நெல்லில் கால்பங்குகூட இருக்காதென அறியவும்.

## 6. ஐப்பசியில் படும் அவதி.

ஐப்பசி, கார்த்திகை இந்த மாதங்களில் ஒரு அறுவடைக் காலம் ஏற்படச் செய்யும். இது மழைகால மென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இக்காலங்களில் ஆதிதிராவிடர்களுக்குக் கொடுக்கப்படும் கூலியானது கார், குருவை நெல்தான் கொடுக்கப்படும். ஈரத்தில் அடிபட்டு முளைத்துக் கிடக்கும் குருவை, கார் நெல்லையும் காலா காலத்தில் கொடுப்பதில்லை. பகல் பூராவும் பஞ்சமர்களின் குடும்பமே சேற்றில் கிடந்து கஷ்டத்துடன் உழைத்து விட்டு, விளக்கு வைக்கும்போது தான் கரையேறுவார்கள். பச்சிளங் குழந்தையுடைய பஞ்சம சகோதரிகளும், 9மீ கர்ப்பத்துடனிருக்கும் சகோதரியானாலும் இந்தக் காலங்களில் பகல் பூராவும் வேலை செய்து தான் ஆகவேண்டும். இப்பெண்களுக்கும் விடுமுறை இல்லை. வேலை செய்யும்போது பச்சிளங் குழந்தைகளை வயல் கரையில் போட்டு விட்டு வேலைசெய்வார்கள். வயல் கரையில் போடப்பட்டிருக்கும் பச்சிளங் குழந்தைகள் பாலுக்குக் கதறினாலும் உடனே தாயார்வந்து பால் கொடுக்க முடியாது. வயல் கரையில் குடை, பாதரக்ஷை, கைப்பிரம்பு, தாம்பூலப்பெட்டி முதலிய தளவாடங்களுடன் நின்று கொண்டு கவலையற்று அதிகாரம் செலுத்

னும் ஆண்டை மார்களிடம் விடை பெற்றுக் கரை ஏறின னும் அங்கம் முழுதும் சேறாய் இருப்பதால் எப்படிப் பால் கொடுக்க முடியும். ஆகவே அங்கத்தில் படிந்திருக் கும் சேற்றைச் சுத்தி செய்து கொள்வதற்குள் கவலை யற்றுக்கரையில் நிற்கும் ஆண்டைக்கு அவசரம் வந்து விடும். வேலை தாமதப் படுகிறதே என்ற அவசரம் சில மிராசுதார் களுக்குஏற்படும். சிலருக்குசும்மாவாவது அதிகாரம் செய்து கொண்டிருக்க வேண்டுமென்ற மனப்பான்மை ஏற்படும். அவசரப் படுவதுடன் கோபமும் வந்து விட்டால் கள்ளையும் குடித்துத் தேளையும் கொட்டிக் கொண்ட குரங்கின் சேஷ் டைக்கும், அந்த மிராசுதார்கள்செய்யும்அட்டகாசத்திற்கும் கொஞ்சங் கூட வித்தியாசம் இருக்காது. தாங்களும் தங்கை, தமக்கை, தாய்மார்களுடன் வாழுபவர்களாக நினைக்கமாட் டார்கள். மாட்டு ஜென்மத் துக்கிருக்கும் கருணைகூட இல்லா மல் பச்சிளங்குழந்தைக்குப்பால்கொடுக்கக் கரைஏறியபஞ்சம சகோதரியைப் பதறப் பதற அடிப்பார்கள். படவா பறச் சிறுக்கிக்குக் கொழுத்துப்போச்சு என்பார்கள். மயிரை அறுடா, கட்டிவைத்து உதையடா என்பார்கள். வாயில்வைத் துப் பேசாதவார்த்தைகளை யெல்லாம்பேசுவார்கள். இவ் வார்த்தைகளை மிராசுதார் வீட்டுப்பெண்கள்முன்தப்பித்தவறி சொல்லிவிட்டால்மகத்தான அவமானம் வந்து விட்டதாகச் சொல்வார்கள். இந்தவசவுகள்எல்லாம் அங்கம் அலம்பியகுற் றத்திற்காக உதைகொடுக்கப்படும் போது, உதைக்குஆதார மாகச் சொல்லப் படுபவைகளாகும். இறுதியாகக் கதறிய பச்சிளங்குழந்தை பால் குடித்திருக்கமுடியாது.உயிர்போவது மாகி வீர்வீரென்று கதறினாலும் அதிகாரமமதையே உருக் கொண்டு நிற்கும் ஆண்டையின் செவியில்அவ்வழுகைஏறாது. ஆண்டைகள்அக்கம்பக்கம் போய்இருக்கும் சமயம்தான்கத றியகுழந்தைக்குப்பால் கொடுக்கமுடியும். இந்தப்படிதிருட் டுத்தனமாய்ப் பால் கொடுத்து முடிவு பெறும் வரை தன் உயிர்தனக்குச் சொந்தமில்லாமலே கொடுப்பார்கள். எங்கு

ஆண்டைமார்கள் வந்துவிடுவார்களோ என்றுசுற்றுமுற்றும் பார்த்துக் சொண்டே கொடுப்பார்கள்.

வேலை நேரத்தில் வெற்றிலை பொளவு போட்டுக்கொள்ளவேண்டு மானாலும் ஆண்டைமார் பார்க்கும்படி நின்று கொண்டு போட்டுக் கொள்ள முடியாது. குனிந்து வேலை செய்வது மாதிரியே அபிநயித்துத் தான் போட்டுக் கொள்ள வேண்டும். மார்புத் துணியை இடுப்பில் சுற்றிகொண்டுதான் நடவு போடுவார்கள். இவ்வளவு மானங்கெட்ட தனத்துடனும், மகத்தான கஷ்டத்துடனும் வேலை செய்து, விளக்கேற்றும் போது கரையேறினலும் நேரேசேரிக்குப்போய் கஞ்சிகாய்ச்சிக்குடிக்கமுடியுமா என்ருல் இல்லை. கால்நடுங்க, கைநடுங்க, ஆண்டைவீட்டு அண்டையில், ஆணும், பெண்ணும் கூலிக்குப்போய்க் காத்திருக்க வேண்டும். இவர்கள் ஆண்டைவீட்டு அண்டையில் தலைவிரி கோலமாய்க்கூலிக்கு நிற்கும்காட்சி பகுத்தறிவுள்ள மானிட உலகத்தில் கேவலமான காட்சிக்குரிய சின்னமாகவே இருக்கும். இந்தக்கேவலமான பஞ்சமர்களுடைய கோலத்திலும் அவர்கள் ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் நம்பாத காட்சி வெகு விந்தையாய் இருக்கும். கள்ளுக்கடையைக் குறியாகக் கொண்டு புருஷன் நிற்பான். கஞ்சி காய்ச்சிக்குழந்தை குஞ்சுகளை வளர்க்க வேண்டுமென்பதைக்குறியாகக்கொண்டு பெண்ஜாதி நிற்பாள். எங்கு, தன் கூலியை வாங்கிப் போய் கள்ளுக்குக் கொட்டிவிடுவாரோ கணவர் என்ற சந்தேகத்தைப் பெண்ஜாதியும், எங்கு தன் சம்பளத்தைப்பெண்ஜாதி வாங்கிப்போய் விட்டால் கள்ளுக் கடைக்குபோகமுடியாதே என்று பேரதையைஎதிர்பார்த்து நிற்கும் புருஷன் கொள்ளும் சந்தேகமும் நியாயமான சந்தேகமென்றாலும், இந்த மனப்பான்மையினல் ஏற்படும் அவதியில், மிராசுதார்கள் நுழைந்து கொண்டு தம் காரியத்தைச் சாதித்துக் கொள்கிருர்கள் என்கிறபோது வருத்தப் படாமலிருக்க முடியவில்லை.

இந்த நிலையில் ஆண்டை வீட்டு அண்டையில் காத்து நிற்கும் உழைப்பாளிகளின் பரிதாபத்தை முற்றும் உணர்ந்த ஆண்டைமார்கள் ஒன்றும் தெரியாதவர்கள் மாதிரி சற்று நேரம் நடித்துக் கொள்ளுவதென்பதை அவர்களுடைய பெரிய தனத்தில் ஒரு அம்சமாகக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஆண்டைமார்கள் தங்களின் சாயங்காலக் கடன்கள் என்று சொல்லப் படும், நேமம், நிஷ்டை, அனுஷ்டானம் போன்ற வந்தனை வழிபாடுகளைச் செவ்வனே முடித்துக் கொள்ளுவார்கள். தங்கள் வீட்டுக் குழந்தைகளிடம் குலாவுவார்கள். அக்குழந்தைகள்கொஞ்சம் அழஆரம்பித்து விட்டால் ஆண்டையும் ஆச்சியும்சேர்ந்து சமாதனம்செய்து ஓயவைப்பார்கள். சற்றுநேரம் ஆச்சிமார்களுடன் குடும்பக் கதைபேசுவார்கள். கொஞ்சம்வெல்லம்காப்பிஅருந்திக்கொள்வார்கள். ஆடம்பரங்களை யெல்லாம் ஒருவாறு முடித்துக் கொண்டு ஆடி அசைந்தவர்களாய்த் தொந்தியைத் தடவிக் கொண்டு வெளியில்வருவார்கள், பசியால்கண்மழுங்கிக் காதிருண்டு,அலங்கோலமாய்நிற்கும் ஆதிதிராவிடர்களைமுதலாளி சாடையில் ஏறிட்டுப்பார்ப்பார். ஏண்டா பயல்களா!எங்கடா வந்து நிற்கிறீர்கள்? என்று உலகமே தெரியாதவர்கள்போல் கேட்பார்கள். இவர்களுடைய இக்கொடுமையான மொழி, பசித்து நிற்கும் பஞ்சமர்களுக்குக் காதில்ஈயத்தை காய்ச்சி ஊற்றுவது மாதிரியிருந்தாலும் பசியின் கொடுமையால் பயந்து கொண்டு "நேற்றுத்தொட்டு வயத்துக்கு கஞ்சியில்லை; பட்டினி கண்ணைஇருட்டுது; காதை அடைக்கிறது; 5நாள் கூலி பண்ணையில் வரவேணும்; ஏதாவது வாங்கிப் போய்த்தான் எல்லாம் ஆக வேண்டும்; போன் கூலிமுறை கூட காரியஸ்தரில்லை என்றுகொடுக்கவில்லை; கடனும் கட்டியும் வாங்கி இருக்கிறோம். மழை இருட்டிக்கிட்டு வருகிறது. குச்சு ஒழுகுகிறது" என்ற பரிதாபமான ஓலத்தைவிண்ணப்பித்துக் கொண்டாலும் இறுதியாக ஏதாகிலும் கொடுக்கச்சொல்லித் தவம் கிடப்பார்களேஒழிய கணக்குப்படி மாத்திரம் கூலியை கேட்கமாட்டார்கள்.

இந்த ஓலமெல்லாம் மிராசுதார்காதில் ஏறுது. "பறையன்" திமிர்கொண்டு பேசுவதாக நினைப்பாரே ஒழிய வேறில்லை. "அந்தவேலை அப்படி நடக்கவில்லை. இந்த வேலை சரியாய் நடக்கவில்லை. விராட்டி தட்டிப் போடும்படி பண்ணையில் ஆச்சி சொன்னதை ஒருபயலுங் கேட்கவில்லை. மழைகாலத்தில் விறகு இல்லையாம். நாளைக்குஒருபயல்வந்து காய்ந்த கட்டையாக 2 கட்டைகளைப்பிளந்துவிட்டுப்போக வேண்டும். இந்தவேலைகளும் வயல் வேலைக்கு இடஞ்சலில்லாமல் செய்யவேண்டும்" என்ற இன்னும்பல அதிகாரங்களைச் செய்துவிட்டு, "என்டா இப்போதே 5நாள் கூலியும் வேணுமா என்ன? சம்பளப்பாக்கி பண்ணையிலிருந்தால்குடியா முழுகிவிட்டது? பறையெல்லாம் வர வரக் கொழுத்துவிட்டது" என்பது போன்ற அதிகாரப் பேச்சும் நாணயப் பேச்சும் பேசுவார்கள். இப்படிப்பட்ட பேச்சுகள் பகல் பூராவும் பட்டினி கிடக்கும் பஞ்சம சகோதர சகோதரிகளுக்கு எப்படி இருக்கும். இறுதியாக மிராசுதார் "காரியஸ்தன் வெளியில் போய் இருக்கிறான்; வந்ததும் ஏதாவது கொஞ்சம் கூலி கொடுக்கச்சொல்கிறேன். சற்று இருந்து வாங்கிப் போங்கடா! வாங்கிப்போய் விடிய விடியத் தூங்கிவிடாமல்நிலம்தெளியவயலுக்குவந்துவிடவேண்டும்" என்று சொல்லி உள்ளேபோய்விடுவார். இந்த நிலையிலும் பொறுமையே உருக்கொண்டிருப்பார்கள். மழையோ அடித்து சப்தமாரி பொழிகிறது. குச்சுகள்எல்லாம் ஒழுகிக் கொண்டிருக்கிறது. அடுப்புக்குஇல்லை. இந்தக் கஷ்டத்தால் சூழப் பட்ட பரிதாபத்துக்குரிய பஞ்சமர்கள் ஆண்டை வீட்டுக் காரியஸ்தன் வருகையை எதிர்ப்பார்த்துக் கொண்டுநிற்பார்கள்.

## 7. கஞ்சி காய்ச்சும் காட்சி.

காரியஸ்தன் மெதுவாக ஆட்டி அசைத்துக்கொண்டு வருவான். அவன் வந்தவுடன் செய்ய வேண்டிய அதிகாரத்தையும், வைய வேண்டிய வசவுகளையும் ஒருவாறு

துடித்துக் கொள்ளுவான். அதன் பிறகு இரவு ஒன்பது மணிக்குத்தான் ஈரக்குருவை நெல்லை ஆளுக்குப் பதக்கு விதம் அளந்து கொடுப்பான். ஈரநெல்லை இரவு ஒன்பது மணிக்குக் கொண்டு போய் பரிதாபத்திற்குரிய மக்கள் என்ன செய்வார்கள்! மழையோ பெய்கிறது! குடியிருக்கும் குச்சோ ஓட்டை. எங்கும் ஈரம். அடுப்பெரிவதோ மிகக் கஷ்டம். இந்த நிலையில் என்ன செய்வார்கள் பாவம், எப்படியோ எல்லாக் கஷ்டத்தையும் பொருட்படுத்தாமலும் தங்கள் தீவினையை நினைத்துக் கொண்டும், பெண்கள் ஈர நெல்லை வறுத்துக் குற்றிக் கஞ்சி காய்ச்சுவார்கள்.

இதற்குள் கள்ளுக்கடைக்குப்போன கணவன்மார்கள் வந்து விடுவார்கள். ஆல்களும் பெண்களும் குழந்தைகளும் குட்டிகளும் எல்லோருமாகப் பட்டமிளகாயைத் தொட்டுக் கொண்டு ஆளுக்குக் கொஞ்சம் உணவருந்துவார்கள். ஆகவே கஞ்சியும் பட்டமிளகாயுந்தான் அவர்களுடைய நித்திய உணவாகும். இம்மாதிரி கஞ்சிகாய்ச்சிக் குடிப்பதைத்தவிர வேறுநல்ல பதார்த்தங்கள் செய்யவும் அவர்களுக்குச் சரியாகத் தெரியாது. சிலநாட்களில் கள்ளுக்கடைக்குப் போய்வரும் கணவருக்குக் குடிவெறி அதிகப்பட்டுவிட்டால் பெண்கள் படாதபாடுபட்டுக் காய்ச்சிய கஞ்சிக்கும் ஆபத்து வந்துவிடும். காய்ச்சியகஞ்சியைத் தூக்கிப்போட்டு உடைத்து விட்டுத்தடபுடல் பண்ணுவார்கள். இதனால் எல்லோரும் பட்டினி கிடக்கும் சந்தர்ப்பமும் ஏற்படும். இந்தநிலையிலாவது இரவுமுழுதும் கழியுமா என்றால் அதுதான் இல்லை. இரவுபனிரண்டுமணிக்கு ஈரத்தரையில்தான் படுக்கும்படி ஏற்படும். அவர்களுக்குப் படுக்கவும் பாய் இருக்காதென்பதைத் தனியாகச்சொல்லத் தேவையில்லை.

இரவு மூணரைமணி ஆயிற்றோ இல்லையோ, வேலைக்குப்போவதற்காக ஆள் எழுப்பும் சத்தம் சேரியின் தலை

மாட்டில் கேட்கும் ஆள்கூப்பிடும் காரியஸ்தன், உழவுமாடுகளையும் கையோடு ஓட்டிக் கொண்டு சேரிப்பக்கம்வந்திருப்பான் இரவு நாலுமணிக்கே ஆளையும் உழவுமாட்டையும் சேர்த்துவிட்டு ஏர்பிடிக்கும் வேலையைத் தொடங்கிவிடுவார்கள் பஞ்சம சகோதரிகள் ஈரநெல்லை வறுத்துக் குற்றிக் காய்ச்சியகஞ்சியை, காலைஎட்டுமணிக்குக்கலயத்தில்ஊற்றிக் கணவன் மார்களுக்குக் கொண்டுவருவார்கள், அவர்கள் கணவன் மார்களுக்குக் கஞ்சிகொடுத்ததும்தாங்களும்நடவு நட ஆரம்பித்து விடுவார்கள் இதன்மத்தியில் இரவுக்காலங்களில் கண்விழித்துக் கொண்டு பாய்கால், வடிகால் மடை கோலுதலாகிய வேலையும், அவ்வப்போது குறுக்கிடும் இந்த முறையில் பஞ்சமர்களின் வாழ்வு நித்தியகண்டம் பூர்ணயு சாய்க்கழியும்.

## 8. தானியங்குவியும்தைமாதம் பிறக்கும்.

ஆனிமாதந் தொட்டு இராப்பகல் பட்டினி கிடந்து பாடுபட்டுழைத்தவர்கள் ஆதிதிராவிடர்களென்பதைஎவரும் மறுக்கமுடியாது; உழுதவர்கள் அவர்கள்; உழுதமாட்டை வளர்த்தவர்கள் அவர்கள்; நிலத்தைப் பண்படுத்தியவர்கள் அவர்கள்; எருவடித்தவர்கள் அவர்கள்; பரம்படித்தவர்கள் அவர்கள்; விதை விதைத்தவர்களும் அவர்கள் தான்; நாற்றுமுடியைக் கையிலேந்தி கைகடுக்க நடவுபோட்டவர்கள் அவர்கள் வீட்டுப் பெண்மணிகள் தான், கைநோகக் களையெடுத்தவர்களும் அவர்கள் தான்; இவ்வாறு ஆதிதிராவிட குடும்பமே ஒன்றுசேர்ந்து, அரைப்பட்டினி, கால்பட்டினி, முழுப்பட்டினி, என்றபாவத்தோடு பாடுபட்டுப் பண்படுத்திய தனுலல்லவா தானியங்குவியும்தைமாதம்பிறந்தது? தானியம் சொரியும் தைமாதத்திலாவது பசியால் சோர்ந்து கிடக்கும் அவர்கள் முகம் பிரகாசப் படுவதுண்டா? மேலே சொன்ன தரித்திர நிலைக்குக் கடுகளவாவது விடுதலையுண்டா? குபேரப்பட்டணம் கொள்ளை போனாலும் அவர்கள்

பஞ்சைப்பிரஜைகளே! ஆடிப்பட்டத்தில் சேற்றைப் பூசிக் கொண்டு உழைப்பதும், அறுவடைக் காலங்களில் நெல் சுணையின் அரிப்பில் கிடந்து கஷ்டப்படுவதுந்தான் அவர்கள் முடிவாகக் கண்டபலனுகும்.

அறுவடைமுடிந்தாலுங்கடைசியன்றுஎல்லாமிராசுதார் களாலும் ஒருகொண்டாட்டம் நடத்தப்படும். அதாவது அறுவடை முடிந்தகடைசிநாள் என்பதற்காகவே அக் கொண்டாட்டத்தைக் கொண்டாடுவார்கள். இந்தக்கொண் டாட்டத்திலாவது தானியங் குவியக் காரணபூதர்களாயி ருந்த பஞ்சமர்களுக்குக் கலந்து கொள்ள உரிமையுண்டோ? அன்று தினம் வழங்கப் படும் சந்தனம், தாம்பூலம், பழம் இவைகள் பஞ்சமனைவிட உயர்ஜாதியாகக் கருதிக் கொண் டிருக்கும் கிராமப் பொதுமணியக்காரன், கிராமத்தலையாரி, வண்ணான், பரியாரி, நோக்கன் (தாரைக்காரன்) போன்ற வர்களுக்கே முதலில் வழங்கப்படும். மீதப்பட்டால்தான் பஞ்சமர்களுக்குக் கொடுப்பார்கள். இல்லாவிட்டால் கள் ளுக்குக்காசு கொடுத்து விரட்டி விடுவார்கள்.

சாகுபடி ஆரம்பிப்பதற்கு முந்தியும், எல்லாக் கிராமங் களிலும் 'விதை முகூர்த்தம்' என்ற ஓர் விழா நடைபெறும் அந்த விழாவில் கூட புரோகிதப் பார்ப்பானுக்குத்தான் வருமானமேயொழியஇவர்களுக்கு ஒன்றுமில்லை. உழைப் பதற்கு அழைக்கும்போது கூட எட்டி நின்றுதான்அழைப் பார்கள் உணவுக்குப் பொருள் கேட்டால் விரட்டி அடிப் பார்கள். அவர்கள் உழைப்பைஅடியோடுநின்றுகொழுத்து வருவது ஒருபக்கமிருக்கட்டும். அவர்களின் சிரம மான வாழ்வில் தீட்டு என்று ஒன்றைச் சொல்லி எத்துறை யிலும் அவர்களை நெருங்க விடாது ஒதுக்கிவைக்கும் மிராசு தார்களின் கொடுங்கோன்மையைவாயாற்சொல்லவும் முடி யாது.பஞ்சமர்களின்சொற்பஊதியமெல்லாம்மிராசுதார்சின் னப்படிக் கொள்ளை, அங்காடிக் கொள்ளை, கள்ளுக்கடைக்

கொள்ளை போன்றவைகளால் ஒழிவது போக பாக்கியில் கூட மோட்சலோகத் தரகர்களான குருமார்கள் தங்கள் தங்கள் மோட்ச லோகக் கதவுகளைத் திறந்து விடுவதாகச் சொல்லி ஓரளவு கொள்ளை கொண்டு விடுவார்கள். அவர்களுடைய ஊதியத்தைக் கொள்ளை கொண்டு போவதற்கு இவ்வளவு மகான்கள் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மகான்கள் கையில் சிக்காமல் மீதமாவதுதான் அவர்கள் உணவிற்கு உபயோகப்படும்.

## 9. தாகந்தீரவும் தண்ணீரில்லை.

ஆதிதிராவிடர்களுக்கு ஆடிப்பட்டத்தில் மகத்தான வேலைக் கஷ்டங்களிருந்தாலும் மாரிக்காலமானதால் தண்ணீர்ப்பஞ்சமில்லை தை, மாசி, பங்குனி, சித்திரையான கோடைகாலங்களில் குடிதண்ணீருக்கே தவித்துக் கொண்டிருப்பார்கள் நெல் அறுவடை செய்து ஆண்டைமார்வீட்டுப் போரடியில் போடுகிறவரையிலும் அதாவது தைமாதத்திலிருந்து சித்திரை மாதம் முடிய நாலுமாதம்நெல்சுமையையும் குளித்துப் போக்கிக் கொள்ள கோடைக்காலமானதால் அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்காது. கிராமத்துக்கு இரண்டொரு குளமோ, கிணறோ இருந்தாலும் அதுவும் ஆண்டை வீட்டுப் புழக்கத்துக்குவேண்டுவதாய்இருக்கும். ஆகவே அவைகளில் இறங்கினால் ஆண்டைமார்களின் கோபத்திற்குப் பாத்திரப்படும்படி நேரிடும். அரிப்பு அளவுக்கு மீறித்தாங்க முடியாத நிலையில் மறைமுகமாய் இறங்கி விட்டால் கொழுத்த பறைகள் என்ற அபாண்டத்திற்கு ஆளாக வேண்டும். இவர்கள் குளத்தில் இறங்குவதைக் காணும் எவரும் கேள்வி முறையில்லாமல் அதிகாரம் செய்யலாம். தாகந்தீர குடிதண்ணீரே எடுக்க முடியாதென்றால் குளிக்கவா முடியும்! ஏதாவது மீன் பிடித்து, வற்றி ஒன்றுக்கும் பிரயோஜனமற்ற குளங்கள், ஓடைகளிருந்தால் அதில்தான் குளிக்க வேண்டும். குளிக்கப்போயும் சேற்

றைப் பூசிக்கொள்வதென்ற கதை இக்கூட்டத்தாருக்குத் தான் சொல்லப்பட்டது போலும். ஆகவே குளிக்கவும், குடிக்கவும் தண்ணீர் வசதியில்லாமல் போய் விட்டதால் அவர்கள் தேகமே அழுக்கடைந்து ஆபாசமடைந்திருப்ப தில் என்ன ஆச்சர்யமிருக்கிறது.

தலைக்கு எண்ணெய் இல்லையென்பதைச் சொல்லத் தேவையில்லை. தேகத்திற்கு எண்ணெய்ப்பசை இல்லாத தால் தலைகளிப்படி சடையாய்ப் போயிருப்பதோடு, தேக மும் வரவரத்துப்போயிருக்கும். சவரம் செய்துகொள்ள முடியாது. கிராமப்பரியாரிகள் இவர்களுக்குச் சவரம் செய்தால் தமது குலப்பெருமைக்குப் பங்கம வந்துவிடுவ தாக நினைப்பார்கள். மிராசுதாரர்களான பெரிய தனக்கா ரர்களும் இதற்கு ஒப்பமாட்டார்கள். சவரம் செய்து கொள்ள வசதியில்லாததால் ரோமங்கள் காடுமண்டிப் போய்க் காட்டுமிராண்டிகளாகவே காணப்படுவார்கள்.

பஞ்சமர்களின் ஆடை விஷயம் வெகுவிந்தையானது. அடிமையை ஸ்திரப்படுத்துவதற்கு வருஷத்திற்கு ஒருமுறை ஆறுமுழம் கிழிவுத்துணி எடுத்துக்கொடுக்கும் பழக்கம் உண்டு. இது தீபாவளியிலாவது, பொங்கலிலாவது எடுத் துக்கொடுக்கப்படும். இந்த ஆறுமுழக்கிழிவும் கோடியாய் இருப்பதால் அழுக்கடைந்ததும் அதன் நிலை மிகமோசமாகி விடும். வெளுக்கும் வசதி கிடையாது. துவைக்கும் வச தியும் இல்லையென்றால் அவர்கள் உடை விஷயம் எப்படி ஆரோக்கியமாய் இருக்கமுடியும். சீலைப்பேன் பிடித்த அழுக்கடைந்த வஸ்திரந்தான் சதாகாலமும் அவர்கள் அணிந்துகொண்டிருப்பது. "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்ற பழமொழிப்படிகூட அவர்கள் நடந்துகொள் ள வசதியற்றவர்களாக ஆகிறார்கள். தப்பித்தவறித் தண் ணீர் அகப்பட்டுத் துவைத்தாலும் கோடியானதால் அழுக் கும் விடாது. பஞ்சம சகோதரிகளுக்குப் புடவை எடுத் துக் கொடுப்பது கிடையவே கிடையாது. ஆனால் ஆண்டை

வீட்டுத் தெருக்கூட்டியும், மாட்டுக்கொட்டில் சாணி வாரியும் மாட்டுக்குப்புல் அறுத்துவைத்தும் வேலைசெய்யும் பெண்மணிகளுக்கு மாத்திரம் உழைப்பைப் பொறுத்து ஒரு புடவை எடுத்துக்கொடுக்கப்படும். இது வருஷம் பூராவும் வேலைசெய்துவிட்டுப் பெற்றுக்கொள்ளும் சன்மானமே தவிர இனுமல்ல. சாணிப்பறைச்சி, வழக்கப்புல் வைக்கிறவள், தெருக்கூட்டுகிறவள் என்ற சகோதரிகளைத் தவிர, இதர சகோதரிகளுக்கு இடுப்புத்துணி எடுத்துக் கொடுக்கப்படமாட்டாது. இவர்கள் வருமானத்தைப்பற்றி மேலே சொல்லிவிட்டபடியால் சொந்தப் பொருப்பில் இடுப்புத் துணி எடுத்து அணியமுடியாதென்பதைச் சொல்லவேண்டியதில்லை. ஆகவே அவர்கள் ஆடை அரை ஆடைதான். இன்னுங்கிராமங்களில் சுற்றிப்பார்த்தால் மார்பில் துணியில்லாமல் ஆயிரக்கணக்கான ஆதிதிராவிட சகோதரிகளைப் பார்க்கலாம். ஆனல் இந்த அரை ஆடை தரித்துத்திரியும் ஆதிதிராவிடர்களின் இடைவிடா உழைப்பை, இராப்பகல் உழைப்பை, உடல் நலுங்காமல் தின்று கொழுக்கும், சோம்பேறி மிராசுதாரர்களான ஆண்டை வீட்டு ஆச்சிமார்கள் மாத்திரம் நித்தியப்படியில்கூட ரூ. 40—50 பெறுமான சேலை தரிப்பதில் குறைத்துக் கொள்ளுவதில்லை. அரை ஆடை தரித்துத்திரியும் ஆதிதிராவிட சகோதரிகள்மாதிரி ஆண்டை வீட்டு ஆச்சிமார்களுங் காணப்பட்டால் மிராசுதார்கள் மனம் என்னபாடுபடுவென்பதைக் கூட யோசித்துப் பார்ப்பதில்லை. உலகமே உண்டு கொழுப்பதற்கு உழைத்துக்கொட்டும் இந்தச்சமூகம் மார்புத் துணியில்லாத பெண்களையும், கௌபீனந்தரித்த ஆண்களையும் தாங்கிக்கொண்டிருப்பதென்றல் இதைவிட மானங்கெட்டதனம் இந்த நாட்டிற்கு வேறு என்ன வேண்டும்.

## 10. ஆண்டை வீட்டு ஆச்சிமார்களோ!

ஆதிதிராவிடர்கள்பால் ஆண்டைகள் அடிக்கும் திருநடனத்தைப்போல் ஆச்சிமார்கள் செய்யும் கொடுமை

சொல்லவே முடியாது. ஆண்டைமார்களின் தெருப்பக்கத் தொல்லை முடிந்ததும் ஆச்சிமார்களின் கொல்லைப் பக்கத்து நாட்டாமை வெகு விந்தையாயிருக்கும். வயல் வேலையில், கொல்லை குடிக்காட்டு வேலையில் குற்றம் சொல்லிக் கோபித்தும், ஏன்? உதைத்தும் முடிந்ததோ இல்லையோ, ஆச்சிமார் கொல்லைப்பக்கத்து நாட்டாமை ஆரம்பமாகும். "விறகு உடைக்கவில்லை. விராட்டித்தட்டப் பெண்டாட்டியை அனுப்பவில்லை. சொல்லிப் பத்துநாள் ஆயிற்று. பறப் பயல், பறச்சிறுக்கி எல்லாம் கொழுத்துவிட்டார்கள்" என்பதுபோன்ற நாட்டாமை கிளம்பிவிடும். ஆச்சியின் நாட்டாமை ஆண்டையின் காதில் விழுந்ததும், உச்சி குளிர்ந்து விடுவதோடு ஆச்சி சலுகைக்கென்றும் ஆதிதிராவிட சகோதரர்கள் உதைபட்டாகவேண்டும். மகாத்மா காந்தி அவர்கள்கூட "இந்திய நாட்டுப்பெண்மணிகள் ஒவ்வொரு வீட்டின் அரசிகள்" என்று சொன்னார். இவர்களின் அரசுரிமை என்பது இதுதான்போலும்!

பத்துப் பதினைந்து வேலி மிராசுதாரனுக்கு அமைந்திருக்கும் ஒரு குடும்பத்தின் ஆச்சியை எடுத்துக்கொள்வோம். ஒவ்வொரு பண்ணை ஆச்சிகளும் சிறுவாடு சேர்ப்பதென்ற பழக்கம் அவர்கள் வம்ச பரம்பரையிலேயே உதித்ததாகும். ஆண்டைக்குத் தெரிந்தும் தெரியாமலும் சிறுவாடு சேர்க்கும் பணம், பொருள், அவைகளை வினியோகிக்கும் முறை, ஏமாற்றம், ஆனந்தம் போன்றவைகளைச் சொல்வதென்றால் மிகவிரியுமாதலால் விட்டுவிடுவோம். இவர்கள் சிறுவாடு சேர்க்கும் விஷயத்தில் நாம் தலையிடவில்லை. அது எந்த இழவாய் இருந்தாலும் நமக்குக் கவலை இல்லை. என்றாலும் அவர்கள் சேர்க்கும் சிறுவாட்டுக்காகப் பஞ்சமர்களும் வதைக்கப்படுவதால் அதைக்குறிப்பிடாமலிருக்கமுடியவில்லை. ஆச்சிமார்களின் வில்லித்தனம் அபாரமானது. அவர்கள் உப்புமுதல் கற்பூரம்வரை விலையாக்கிவிடுவார்கள், அதோடும் விடமாட்டார்கள். பண்ணை

மாட்டுச் சாணியெல்லாம் எருவுக்குக்கூட இல்லாமல் அடுப்புக்கென்று காரணம் சொல்லி, விராட்டிதட்டி அணாவுக்கு ஐந்து புலையலென்று விற்றுவிடுவார்கள். இந்த விராட்டி தட்டிச்சேர்த்துக்கொடுக்கும்ஊழியம் எல்லாம் ஆதிதிராவிட சகோதரிகளைச் சேர்ந்தது. வயல் வேலைகளோடு இந்த வேலைகளையும் இடையிடையே ஊதியமில்லா உத்தியோகமாகக் கவனித்துக்கொள்ளவேண்டும். ஆச்சிமார்கள் தாங்கள் கட்டிக்கிழிந்த கந்தல்களைக் கருணையோடு தங்கள் பண்ணைப் பறைச்சிகளுக்குத் தூக்கி எறிவார்கள். இந்தச் செய்கை தரித்திரமே உருவாயமைந்த ஆதிதிராவிட சகோதரிகளுக்கு வெகுதாராளமாகக்காணப்படுமே ஒழிய ஆச்சிமார்களுக்குச் செய்துகொடுத்த ஊழியம் இன்னதென்று உணர்ந்து கொள்ளவும் முடியாது. இந்தக் கந்தல் கொடுத்தமைக்குக் காலில் விழுவார்கள். ஆயிரம் புண்ணியவதியை அழைப்பார்கள். காய்ந்த புளவு சரகு, புளித்த நாற்றம் பிடித்த பழையதுபோன்ற சன்மானம் கொடுக்கப்படும்.

அவர்களுடைய வருமானம் சொற்பமாய்விட்டதால், கஞ்சிகுடிக்கக் கலயம் வாங்கவும் வழியிருக்காது. கஞ்சி குடிக்கும் கலயங்களும் ஆச்சிமார்களால் கொடுக்கப்பட்டதாகும். பொங்கல், வருஷப்பிறப்பு போன்ற நாட்களில் தீட்டுக்கழிப்பதென்ற ஒரு பழக்கம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நாட்களில் பண்ணையில் கழித்துப் புழக்கடையில் ஒதுக்கும் பழஞ்சட்டிப்பானைகள்தான் பஞ்சம சகோதரிகளுக்கு ஆச்சிகள் இனமாகக் கொடுக்கும் சன்மானம். தீட்டுக்கழித்த இந்தப் பழஞ்சட்டிப்பானைகளைப் பெற்றுக்கொண்ட பாவத்திற்காக ஆதிதிராவிட சகோதரிகள் ஆச்சிமார்களிடம் சில சமயம் மாட்டிக்கொண்டு படுந் துயரம் சொல்லமுடியாததாகும்.

## 19. திருமணக் காட்சி.

இவர்களுடைய திருமணத்தின் நிலை எப்படி இருக்குமென்பதைப் பற்றி இதுவரை சொல்லி வந்த அவர்கள்

வாழ்வின் அடிப்படையான தத்துவத்திலிருந்து தெளிவாக உணரலாம்; என்றாலும் அவர்களுடைய திருமணத்தை ஆண்டைமார்கள் உபயோகப்படுத்தும் மனோதிருஷ்டியைக் கவனிக்கவே இதைக் கொஞ்சம் எழுத வேண்டியிருக்கின்றது. ஒருகுறிப்பிட்ட பஞ்சமத் தோழருடைய இல்லத்தில் திருமணம் செய்வதாக வைத்துக் கொள்வோம். அத்திருமணத்திற்குரிய மணமகன் எந்த ஆண்டைமாரிடத்தில்தான் பிறந்தபோது தனது தாய் தகப்பன்மார்களால் மருந்துச் செலவுக்குக் காசுவாங்கப் பட்டதோ, அதே ஆண்டையிடம் பிரஸ்தாப திருமணத்தைச் சொல்லிக் கடன்கேட்கப் படும்.

கடன்கேட்கும் முறை வெகு விந்தையானது. அதாவது கல்யாணம் செய்து கொள்ளும் மணப்பெண்ணும் தானும் சேர்ந்து ஆண்டைக்கு அடிமையாயிருந்து பண்ணை வேலைசெய்வதாக தஸ்தாவேஜு செய்து கொடுக்கவேண்டும். இந்த முறையில் ஒருகல்யாணச் செலவுக்கு 10ரூபாய் ரொக்கமும் 5கல நெல்லும் கடனாகக் கொடுத்துப் பெரிய உதவி செய்து விட்டதாகப் பெருமையடித்துக் கொள்வார்கள். தாலிமாத்திரம் இனாமாகச் செய்து கொடுக்கப் படும். இதற்கு அந்தரங்கமான காரணங்களில்லாமலில்லை. இந்து சாஸ்திரப்படி ஒருஆணும் ஒரு பெண்ணும் சதிபதிகளாவதென்பது, தாலீ என்ற ஒரு சின்னத்தைத் தரித்துக் கொள்வதினால்தான் என்பது எல்லோரும் அறிந்தவிஷயமேயாகும் இத்திருமாங்கல்யங் கடவுள் சம்பந்தம் பெற்றதாகவும் சொல்லப்பட்டு விட்டதால் தாலி என்ற ஒரு சின்னத்துக்குக் கட்டிவிடப் பட்டிருக்கும் கட்டுகளில் உயர்ஜாதி இந்துக்களே கட்டுப்பட்டு உழலும் போது பரிதாபமே உருவாயமைந்த, பஞ்சம சகோதரர்கள் என்ன செய்ய முடியும், ஆகவே இந்தத் தாலியைக் கொடுத்தவர்கள் ஆண்டைமார்கள் என்கிற போது அவர்கள் எக்கொடுமையைச்செய்தாலும் அதைப் பொறுத்துக் கொண்டு உழைத்

துப்போட்டுக் கொண்டிருப்பதுதான் அவர்கள் செய்வது. ஆண்டைமார்கள் காலால் இட்டவேலையைத் தலையால் செய்யவேண்டுமென ஓர் உணர்ச்சியை உண்டுபண்ணுவதே தாலி இனுமாகச் செய்து கொடுப்பதின் அந்தரங்கமாகும். இந்தத் தாலியின் பெறுமானம் ஒரு ரூபாய்இருக்கும். இந்தத் தாலி செய்து கொடுத்த பிரமாதத்தை உழைத்த காலத்தில் சோற்றுக்கு இல்லாமல் கேட்கும்போதெல்லாம் சொல்லிக் காட்டுவார்கள். இந்தத் தாலியை ஆண்டை வீட்டில் வந்து மேளதாளத்துடன் பெற்றுப்போவார்கள். கல்யாணத்தன்றும், தாலிகட்டியதும் ஆண்டை வீட்டிற்கு, வேகாத வெயிலில்மேளதாளத்துடன்வந்துகாலில் விழுந்து போகவேண்டும். இவர்கள் காலில் விழுந்து கொண்டதற்குக் கொடுக்கப்படும் சன்மானம் விபூதி பிரசாதந்தான். இந்த முறையில் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்குக் கல்யாணத்திற்கு மறுநாள் கஞ்சிக்கு வழியில்லை என்பதைச் சொல்லவேண்டுவதில்லை. புதுமாப்பிள்ளைபெண்ணை மறுதினமே தரித்திரம் சூழ்ந்து கொண்டு விட்டால் அவர்கள் அடிமைத்தனம் எவ்வளவு கேவலமுடையதென்பதைச் சொல்லவா வேண்டும்?

## 12. பிள்ளைப்பேறு.

அவர்களுடைய பிள்ளைப்பேறு சம்பவம் மிக மோசமானதாகும். ஆதிதிராவிடர்களுக்கு ஆண்பிள்ளை பிறந்தால் ஒரு ரூபாய் நான்கணுவும், பெண்பிள்ளை பிறந்தால் பன்னிரண்டணுவும் ஆண்டைமார்களால் கொடுக்கப்படும். இது மருந்துக்காகக் கொடுக்கப்படுவதாகவும், இச் சொற்ப காசு கொடுப்பதின் நோக்கம் குழந்தை பிறந்த அன்றே அடிமை என்பதை நிலைநிறுத்துவதற்கேயாகும். கர்ப்பந்தரிக்கும் பஞ்சம சகோதரிகளுக்குப் பிரசவத்தின் முதல் தினம் வரைகூடத் தமது அடிமை வேலையை வாங்கிக்கொள்வதில் ஆண்டைமார்கள்பின் வாங்குவதில்லை,என்?

பிரசவ வேதனை ஏற்படும் வரைகூட வேலைசெய்யுமிடத்தில் உழைத்து நின்ற அனேக ஆதிதிராவிடச் சகோதரிகளைப் பார்க்கலாம். இந்த நிலையில் பிறக்கும்கர்ப்பம் பெண்ணானால் மருந்துச் செலவிற்குக் (பிரசவச்செலவிற்கு) குறைவாய்த் தான் பணங்கொடுப்பார்கள். ஏன் என்றால் பெண்களைப் பிறருக்குக் கட்டிக் கொடுத்துவிடுவதால் எதிர் காலத்தில் சொந்தப் பண்ணையின் அடிமைக்குப் பிரயோஜனப்படாதென்ற காரணத்தினாலேயே தான். ஆண்பிள்ளையாய் இருந்தால் ஒன்றேகால் ரூபாய் செலவில் பிறந்த மக்கள் கூடிய சமூகமே ஆதிதிராவிட சமூகமென்பதைச் சொல்லவேண்டியதில்லை. இப்பிறவிகளுக்கு ஆறு, ஏழு வயதானதுமே ஆண்டை வீட்டு மாடு மேய்க்கும் உத்தியோகம் ஏற்பட்டுவிடும். இந்த உத்தியோகத்திலிருந்து அரை ஆள் ஆகி, முழு ஆள் ஆகும் பரியந்தம் அடிமை வேலையில் தொடர்பு ஏற்பட்டு விடுவதால் இவர்களுக்குக் கல்வி அபிவிருத்தி ஏற்படுவதற்கு மார்க்கமில்லாமல் போய் விடுவதைப்பற்றிச்சொல்ல வேண்டுவதில்லை. இப்போதுகூட ஒருசிலஆதிதிராவிடர்கள் அ. ஆ. கற்றுக்கொண்டிருப்பதற்கு வெள்ளை அரசாங்கம் தான் காரணமேயொழிய ஆண்டைமார்கள் அல்லவே அல்ல. அவர்களுக்கு விடுதலை வேண்டுமென ஒரு சத்தம் கிளம்பி இருப்பதின் அந்தரங்கமும் வெள்ளை அரசாங்கம்இந்நாட்டிலிருப்பது தான் இந்த சமூகம் தாய்வயிற்றிலிருந்து வெளி வருவதே ஒன்றேகால் ரூபாயிலிருக்கும் போது அவர்கள் வாழ்வின் சரித்திரத்தை அதிகமாகவா விவரிக்க வேண்டும்?

## 13. ஆரம்பக் கல்வி.

பஞ்சமர்களின் சொல்ல முடியாத துக்கத்தின் அடிப்படையான தத்துவத்தைப் பற்றிப் பலபகுதிகளாகப்பிரித்துச் சொல்லியதனாலேயே அவர்கள் கல்வித் துறையில் எப்படி யிருப்பார்கள் என்பதைப் பற்றிச் சொல்லத் தேவை

யில்லை. அவர்கள் தாயின் வயிற்றிலிருந்து வெளி வரும் போதே ரூபா ஒன்றேகாலுக்குக் கடனாளியாகவே வெளி வருகிறார்கள் என்பதை முன் அத்தியாயத்தில் கூறினோம். ஆகவே இவர்களின் குழந்தைப் பருவமே கடன்காரப்பருவ மாய்ஏற்பட்டு விடுவதால் கல்வித்துறை என்ற ஒன்றுஇருப் பதாகவே அவர்களால் அறிந்துகொள்ள முடிவதில்லை. மழலைச் சொல் மாறாமலிருக்கும்போதே மாடு மேய்க்க ஆயத்தப்படுவதும், ஒன்பது வயது ஆரம்பத்திலேயே, தாம் அடிமை, கேவலம் போன்றவைகளே உருவாயமைந்தசாதி யில் பிறந்தவர்கள் என்ற பலமான உணர்ச்சியை ஊட்டிப் புகட்டப்படுவதும், உதைத்தல், அடித்தல், வைதல்போன்ற எக்கொடுமையைச் செய்தாலும் வாய்பொத்தி எதிர்பேசா மல்இருக்கவேண்டும் என்பதுமே அவர்களின் ஆரம்பக் கல்வியாகக் கருதப்படுகிறது. இக்கூட்டத்தாரை வைத்துப் படைத்துக் காப்பதாக மனப்பால் குடித்துக் கொண்டிருக் கும் மிராசுதாரர்கள் மேலே சொன்னவைகளையே அவர்க ளுக்கு ஆரம்பக் கல்வியாகக் கற்பித்து வருகிறார்கள். 'வாய் பொத்தித்தான் பேசவேண்டும். தெளிவான நடையில் பே சினாலும் பாவம். நல்ல உடை தரித்துக்கொண்டு ஆண்டை மார் முன்னின்று பேசக்கூடாது. கௌபீன கோலத்துடன் நின்றுதான் பேச வேண்டும். தலையில் எண்ணெய் தடவிக் கொண்டும் பேசக்கூடாது. சிக்கல் பிடித்த பாட்டைத் தலை யுடன் நின்றுதான் பேசவேண்டும்'' என்றஇந்தமுறைசறை எல்லாம் அவர்கள் குழந்தைப் பருவத்திலேயே தெரிந்து கொள்ள வேண்டிய ஆரம்பப்படிப்புகள். போனால்''ஏண்டா போனாய்'' போகா விட்டால் "ஏண்டா போகவில்லை'' என்று மிராசுதாரரிட மிருந்து புறப்படும் அர்த்தமற்ற அதி காரக் கேள்விகளுக்கு, பதில் பேசாமல் கட்டுப்பட்டு நடப் பதே அவர்களின் அரிச்சுவடிப் படிப்பாகும்.

இந்த ஆரம்பப் போதனையிலேயே பிறக்கும் பஞ்சமக் குழந்தைகளின் கல்வியை அபிவிருத்தி செய்வதற்காக

"லேபர்டிபார்ட்மெண்ட்" சார்பாக பலவிடங்களில் பள்ளிக் கூடங்கள் வைத்து நடத்துவதுயாவரும்அறிந்தசெய்தியே. இந்த லேபர் டிபார்ட்டுமெண்டை சம்பளம் வாங்கிக் கொண்டு நிர்வாகம் செய்து வரும் திருக்கூட்டத்தாரெல் லாம், மிராசுதாரர்களான உயர்ஜாதி வம்ச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்பதோடு அக்கூட்டத்தாருக்குத் துதி பாடுகிறவர்களும் ஆவார்கள். எலிக்கும் பாலுக்கும் பூனை யைக் காவல் வைத்தது மாதிரி லேபர்டிபார்ட்டு மெண்டை மிராசுதாரர்களுக்குத் துதிபாடுகிறவர்களை நிர்வாகம் புரியச் சொன்னால் அந்தஸ்தாபனம் பஞ்சமர்களை முன்னுக்குக் கொண்டுவர எப்படிப் பாடுபட முடியும் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். இந்த லேபர் டிபார்ட்டுமெண்ட் பெரும்பாலும் உயர்ஜாதியார்களின் உத்தியோக வேட் டைக்குச் சாதகமாகவே ஏற்பட்டிருக்கிறதென்று சொல்ல லாம். லேபர் பள்ளிக்கூடத்தில் படிப்பதாகச் சொல்லும் பஞ்சமக் குழந்தைகளை மிராசுதாரர்கள் எவ்வளவு தூரம் பள்ளிக்குச் செல்ல தாராளமாக அநுமதிக்கிறார்கள் என் பதைக் கூர்ந்து கவனித்தால் அந்த ஸ்தாபனத்தின் போக்கு ஒருவாறு புலப்படும்.

கோடைகாலத்தில் அதாவது மாசிமாதத்திற்குப்பிறகு வைகாசிமாதம் வரையிலுந்தான் பஞ்சமச் சிறுவர்களுக்கு மாடுமேய்க்கும் வேலையில் தினம் கொஞ்சம் ஓய்வுகிடைக்க முடியும். ஏனென்றால் மாசிமாதத்திற்குப். பிறகு,பயிர்பச்சை இல்லாத காலம்;மாட்டை மரித்துவிட்டுத் தினம் சிலமணி நேரம் பள்ளிக்கு வரலாம். இம்முறையில் அவர்கள்பள்ளிக் கூடத்திற்கு வர நேரம் கிடைத்தபோதுகூட, குறிப்பிட்ட பள்ளிக்கூட உபாத்தியாயர்தான்வாங்கும்சம்பளத்திற்காக அவருடைய சொந்த முயற்சியால் அழைத்துக் கொண்டு வருவதே தவிர வேறல்ல. இந்த லேபர் பள்ளிக் கூடத்தில் உத்தியோகம் புரியும் உபாத்தியாயர் களுக்கெல்லாம் தின சரிப்பட்டியை எப்படியாவது பூர்த்தி செய்யும் பொறுப்புக் குத்தான் சம்பளம் கொடுக்கப் படுகிறது. இவ்வாறு உபாத்

தியாயருடைய பொறுப்பினலும், முயற்சியினலும் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் அங்கே போயிருக்கும் சிலமணி நேரத்திலாவது ஏதாவது படிக்கிறார்களா? அல்லது படிக்க முடியுமா? என்றால் ஒன்றுமில்லை. அந்தச் சிலமணி நேரத்திற்குள் பிள்ளைகளைக் கூப்பிடுவதற்கு ஆள்மேல் ஆள் வந்துவிடும். மாட்டைக் காணும் என்ற புகாருடன்பட்டிக்காரன் பள்ளியின் வாசலில் வந்து நின்றுகொண்டு வாயில் வந்தபடி திட்டிக் கொண்டிருப்பான். பறையனெல்லாம் படிக்க ஆரம்பித்ததால்தான் பஞ்சம் வந்துவிட்டதென்பான். பள்ளியில் நுழைந்தவுடன், பஞ்சம மாணவர்களுக்கு இன்னும் பலகஷ்டம் ஏற்படும். இத்தொல்லையுடன் அவர்கள் பள்ளிக்கூடத்தை விட்டு வெளிவரும் காட்சி மிகவும் பரிதாபகரமானதாகவே இருக்கும். இத்தொல்லைகளுக் கெல்லாம் லேபர் ஸ்கூல் உபாத்தியாயர்களும் கட்டுப்பட்டுத் தான் நடக்க வேண்டும். ஆகவே லேபர் டிபார்ட்மெண்டால் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய சரியான நன்மைகள் கிடைப்பதில்லை.

லேபர் பள்ளிக்கூடத்தில் படித்த மாணவர்களில் ஒவ்வொரு வருஷமும் எத்தனை மாணவர்கள் உயர்தரப்படிப்பிற்குச் சென்றிருக்கிறார்கள் என்றால் நூற்றுக்கு ஒன்று கூட இருக்கமுடியாது. கட்டாயக் கல்வி ஏற்பட்டுப் பலவருஷங்களாகியும் பஞ்சம சகோதரர்களில் எத்தனை பேர் கல்வியில் கடைத்தேறியிருக்கிறார்கள்? எந்தப் பள்ளிக் கூடங்களிலும் இனவித்தியாசம் பாராட்டாமல் எல்லோரையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்ற அரசாங்கச் சட்டமிருந்தும், அந்தச் சட்டத்திற்கு ஜாதித் திமிர் பிடித்தவர்கள் கடுகளவு மதிப்பாவது கொடுத்திருக்கிறார்களா? அந்தச் சட்டம் குப்பைத் தொட்டியில் கிடப்பதைத் தவிர வேறென்ன? இந்தப் பரிதாப ஜாதியார் தப்பித்தவறி கிராமங்களிலிருக்கும் ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் சேர்ந்துவிட்டால் ஜாதித் திமிர் பிடித்தவர்கள் தங்கள் பிள்ளைகளை

அந்தப்பள்ளிக் கூடத்திற்கே அனுப்பாமல் பஹிஷ்கரித்து விடுவார்கள். இம்மாதிரி சம்பவங்கள் எத்தனையோ நடந்திருப்பதைப் பத்திரிகைகளில் படித்திருக்கலாம். ஆகவே இந்தப் பரிதாபமான ஜாதியாருக்கு எல்லாத்துறைகளிலும் ஜாதி வெறியர்கள் செய்து வரும் மகத்தான தீங்கைப் போலவே கல்வி விஷயத்திலும் அந்தச் சமூகக் குழந்தைகளுக்குக் கேடு செய்கிறார்கள்.

## 14. பஞ்சமர்களிலும் பலஜாதி.

இத்தகைய பரிதாபத்திற்குரிய பஞ்சமர்களின் வாழ்வின் சர்வபாகத்தில் தான் கல் நெஞ்சம் படைத்த மிராசுதாரர்கள் மகத்தான கொடுமைகள் செய்கிறார்களென்பதில்லை. இன்னும் அவர்கள் ஒத்து வாழாதபடி பலசூழ்ச்சிகளையும் செய்திருக்கிறார்கள். பறை பதினெட்டு ஜாதிஎன்ற ஒருகற்பனையைச் செய்து அவர்களிடம் ஒற்றுமை நிலவா வண்ணம் செய்திருக்கும் சூழ்ச்சி மிக மிகப் பரிதாபகரமானதாகும். பரிதாபமே உருவாயமைந்த இந்தக் கூட்டத்துக்கும் இந்தப் பல ஜாதிக் கற்பனை அவர்களின் மனதை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. எப்படித் தாங்கள் மிராசுதார் கூட்டத்திற்கே உழைத்துப் போட ஜென்மமெடுத்திருப்பதாகக் கருதுகிறார்களோ அதேபோல்தாங்கள் பல ஜாதிகள்தான் என்ற உணர்ச்சியையும் நியாயமாகவே கொண்டிருக்கிறார்கள். பஞ்சமன், பறையன், பள்ளன், வெட்டியான், கோலியன், தச்சவரத்தான், அச்சுவேளாளன், தீயன், வள்ளுவன்போன்ற பெயர்களையுடைய ஜாதிகள் இந்தக் கற்பனையின் பாற்பட்டதுதான். இக்கூட்டத்திற்குக் கடவுள் வழிவந்ததாகச் சொல்லும் சிலமகான்களால் அதாவது மகாத்மா காந்தி போன்றமகான்களால் திருக்குலத்தான் என்றும், ஹரிஜனன் என்றும் இருவிதமான பெயர்களைச் சமீப காலத்தில் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த ஜாதிக்குச் சீர்திருத்த ஜாதி என்றும் பெயர்,

இக்கூட்டத்தினருக்கு இந்த ஜாதி வேற்றுமையைக் கொடுத்திருப்பதற்கு மூலகாரணம் அக்கூட்டத்தின் ஒற்றுமையைப் பங்கப் படுத்துவதோடு பிரஸ்தாப வேற்றுமையைப் பலப்படுத்தி விடுவதின் அளவிலிருந்தே மிராசுதாரன் உடல்நலுங்காமல் உட்கார்ந்து சாப்பிடவும், மேலேகுறிப்பிட்ட கொடுமைகளைச் செய்யவும், ஒரு பெரிய சௌகரியமாய் இருக்கிறது. இந்தஜாதிப் பிரிவினைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு மிராசுதாரர்கள் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வது, உடல்நோகாமல் உட்கார்ந்து தின்பது போன்றவைகளை அபிவிருத்தி செய்துகொள்வது வெகு விந்தையானது. ஒருகுறிப்பிட்ட மிராசுதாரனுக்கு சிலபஞ்சமர்கள் அடிமை வேலை செய்கிறார்களென்று வைத்துக் கொள்வோம். இவர்கள் அடிமை வேலையில் ஏதாவது தவறுதல் செய்து விட்டாலோ அல்லது தவறுதல் செய்துவிட்டதாக மிராசுதாரர் நினைத்துக் கொண்டாலோ அதற்காகக் கொடுக்கும் பலதண்டனைகளில் சாதியைக் காட்டிக் கண்டபடி திட்டுவது, கீழ்சாதி என்று கருதப்படுகிறவனை விட்டு மான பங்கப் படுத்தச் செய்வது போன்ற கொடுமைகள் பொறுக்க முடியாததாகும். ஒருபறையன் செய்த குற்றத்திற்கு, பறையனை விடக் கீழ்சாதியாகக் கருதும் வெட்டியானைக் கொண்டு வைவது, அதாவது "வெட்டியாரப்பயலை விட்டு உதைக்கச்சொல். வெட்டியாரப்பயலை விட்டு மயிரை அறுக்கச் சொல், வெட்டியாரப்பயலை விட்டுக் கட்டி வைத்து உதைக்கச் சொல்," என்பன போன்ற மிக இழிவான வார்த்தைகளைப் பேசித் திட்டுவார்கள். சாதிபேத உணர்ச்சிமிகுந்த பஞ்சமர்களுக்குக் கீழ் சாதிக்கார வெட்டியானைக்காட்டி, ஆண்டைமார்கள் பேசிவிட்டார்களே யென்று நினைத்துத்தங்கள் மனதை மிகவும்புண்படுத்திக்கொள்வார்கள். செய்கையில் நடந்துவிட்டால் அவர்கள் மனம் நொந்து விடும். தங்களைக் கீழ்சாதியாகக் கருதிக் கொண்டிருக்கும் வெட்டியான்களுக்கு, மேல் சாதிக்காரர்களைக் கேவலப் படுத்துவதற்குத் தங்களை வலிய பெருமை

கிடைத்ததற்காக ஆண்டைமார்களைப் போற்றுவார்கள். இப்படியே பறை பதினெட்டு ஜாதியிலும் நிகழும். சோற்றுக்குத்தாளம் போடும் இக்கூட்டத்திற்கு இருக்கும்சாதிப் புத்தியைப் பாருங்கள். இந்தமனப்பான்மையைப் பலப்படுத்திக்கொண்டிருக்கும் ஒருபாவமே அக்கூட்டத்தின் அடிமைச்சங்கிலி அறுபடாமலிருப்பதற்குக் காரணமாகும். இந்தப்பொல்லாத ஜாதிப்பாகுபாட்டால் அவர்களுக்கு இன்னும் சில அபாயங்கள் இருந்து கொண்டிருக்கின்றன.

இக்கூட்டத்தினரை என்றும் மீளாப்படுகுழியிலாழ்த்தும்படியான புரோகிதக் கோட்பாடுகளும் தாண்டவமாடுகின்றன. இவர்களுக் குள்ளேயே வள்ளுவர் என்ற கூட்டத்தார் மிக உயர்ந்தவர்களாகவும், குருக்கள்களாகவும் கருதிக்கொண்டு, இருந்துகொண்டிருக்கிறார்கள். இக்கூட்டத்தார் ஜோசியம், ஆரூடம், கைரேகை, புரோகிதம் முதலான தொழில்களையே பெரும்பாலும் கொண்டவர்கள். வள்ளுவக்கூட்டத்தார் திருக்குறளின் ஆசிரியரான திருவள்ளுவர் மரபின் வழிவந்ததாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். என்றாலும் உயர்ஜாதியினர்கள் இக்கூட்டத்தாரையும் தீண்டாதாராகவே கருதிக் கொண்டிருக்கிறார்கள். தங்களை உயர்ஜாதியார் சர்வ துறையிலும் கேவலப்படுத்துகிறார்களே என்ற உணர்ச்சியில்லாமல் பஞ்சம சகோதரர்களை இந்த ஜாதியார்கள் (வள்ளுவர்கள்) எல்லாத்துறையிலும் விலக்கிக் கொண்டிருப்பது வெகு விந்தையானது. பரிதாபத்திற்குரிய பஞ்சம சகோதரர்களுக்கு இவ்வள்ளுவக் கூட்டத்தார் மோக்ஷ கைகாட்டி மரங்களாம்! எப்படி உயர்ஜாதி இந்துக்களுக்கு பிராமணோத்தமர்கள் மோக்ஷ கைட்டிகளோ அதேபோல் வள்ளுவர்கள் பறைபதினெட்டு ஜாதிக்கும் மோக்ஷ கைகாட்டிகளாகும். பறை பதினெட்டு ஜாதியின் நன்மை தின்மைகளுக்குப் பிராயச் சித்தபிம்பங்கள் வள்ளுவர்கள். இந்த வள்ளுவக் கூட்டத்தாரை உயர்வாகக் கருதிக் கொண்டிருக்கும் அடிமை ஜாதியார்கள்

தங்களுக்குக் கிடைக்கும் மிகக் குறைந்த வருவாயினும் ஒரு பகுதியை வருஷ வர்த்தனை என்ற பெயரால் பொதுவாகவும் அவ்வப்போது ஏற்படும்—அதாவது புரோகிதக் கற்பனையால் ஏற்பட்டிருக்கும்—சில்லரைச் சடங்குகளின் பெயரால் சில்லரையாகவும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய வருமானத்தைப் பற்றியும், முன் அத்தியாயங்களில் சொல்லி இருக்கிறேன். கொடுமையும் அநாகரீகமுமே உருவாயமைந்த இக்கூட்டத்திற்கும் மோக்ஷப்பித்துப் பிடித்திருப்பது ஒரு பக்கமிருக்கட்டும். அப்பித்து பலப்பட்டிருப்பதால் சிலகாலத்துக்குக் கிடைக்கும் கொஞ்ச வருமானத்தையும் கொடுத்து விட்டுப்பட்டினி கிடக்கும் காட்சி மிகப்பரிதாபகரமானதாய் இருக்கிறது.

ஆகவே பஞ்சமர்களுக்கும் ஜாதிப் பிரிவினையை அனுஷ்டிப்பது மிராசுதாரர்கள் குதிரை ஏறவும், வள்ளுவப்புரோகிதர்கள் இவர்களை மென்மேலும் பைத்தியக்காரர்களாக்கவும், காட்டுமிராண்டிகளாகவே இருக்கவுமே ஓர் பெரிய வசதியாய் இருக்கின்றது. அதோடும் இந்தப் பெருங்கற்பனைகளைப் பரிதாப ஜாதிக்குப் புகட்டிய உயர்ஜாதியாருடைய அடிப்படையான நோக்கமெல்லாம் தங்கள் பெண்டாட்டி பிள்ளைகள் பல்லாண்டு க்ஷேமமாய் இருந்த விடத்திலிருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கவும், முன்ஜாக்கிரதையாகச் செய்யப்பட்ட சூழ்ச்சி என்பதைப் பரிதாபக்கூட்டத்தார் பூரணமாக உணரவேண்டும். பரிதாப ஜாதியாரின் மாறுதலுக்குப் பாடு படுகிறவர்கள் இக்கொடுமைகளையும் ஆழ்ந்து கவனிக்க வேண்டும்.

## 15. எலிவளை தோண்டும் பரிதாபம்.

பங்குனிமாதம் முதலோடு விளைந்த தானியமெல்லாம் மிராசுதாரர் வீட்டுக் கொல்லைத் தலைமாட்டுச் சேரடியில் கட்டுக்கிடை செய்யப் பட்டாகிவிடும். பங்குனி மாதத்

தோடு போரடி, கருக்காய்ப் பட்டறை இவைகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் ஒன்றிரண்டு நெல்தானியங்களையும் கசக்கி எடுத்துப்பண்ணை வீட்டில் கொண்டுவந்து பந்தோபஸ்துச் செய்தாகிவிடும். சேரடியில் பந்தோபஸ்துச் செய்யும் நெல் எல்லாம் வியாபாரிக்குப்போட்டவைகள் போக மிகுதியாக இருப்பவைகளே கட்டுக்கிடை செய்யப்படும். கட்டுக்கிடை செய்வதெல்லாம் ஆடி அறுதலையில் கிராக்கியாகக் கிறபம் செய்வதே, இருப்புச் செய்யப்படுவதின் அந்தரங்க நோக்க மாகும். இந்தமாதங்களில்தான் மிராசுதாரர்கள் செய்து கொள்ளும் வியாபாரக் கடன்களை ஈடுசெய்து கொள்வது வழக்கம். மிராசுதாரர்களின் தாசி, வேசிகளுக்கு மனம் பூரிப்படையும்படிச் சன்மானம் அளிக்கும் சந்தோஷகர மானகாலமும் இதுவேயாகும். வேசியர்கள் வீட்டிற்குப் பரிதாப ஜாதியார் உழைத்துச் சேமித்திருக்கும் தானியம் வருஷம் பூராவும் உட்கார்ந்து தின்று கொழுக்கக் கட்டுக் கிடை செய்யுங்காலமும் இதுதான்.

பரிதாபஜாதியார் உழைத்துச் சேமித்திருப்பதில்உடல் நலுங்காமல் உட்கார்ந்த இடத்தில்குடி,கூத்தியில் சுகமாகச் சஞ்சரிக்கும் மிராசுதாரர்கள் ஒருபகுதியார்.குடும்பக்கவலை யுள்ள மிராசுதாரர்கள் என்ற ஒரு கூட்டமுண்டு. இவர்கள் பிறர் ஜோலிக்குப் போகமாட்டார்கள் என்றும், பிறத்தி யார் காசுக்கு ஆசைப்பட மாட்டார்கள் என்றும், நல்ல பெயருக்குப் பாத்திரப்பட்டுக் காலம்கழிப்பவர்கள் என்றும் கூறப்படுவார்கள். இக்கூட்டத்தார் குடும்பத்திற்கு அவசிய மான சாமான்களை வாங்கி அபிவிருத்தி செய்வதிலும், பெண்டாட்டி பிள்ளை குட்டிகளுக்குக் காலத்திற்கேற்ற நவீனமுறையில் நகைகள் செய்து போட்டு அலங்கரித்து அழகுபார்ப்பதும், பாத்திரபண்டங்கள் வாங்குவதும், மிகுந்தவைகளைத் தக்க இடத்தில் வட்டிக்கு விட்டு இருக் கும் சொத்தோடு சொத்தாக அபிவிருத்தி செய்யும் வேலை யில் காலம் கழித்துக் கொண்டிருப்பவர்கள்.

இன்னொரு சாரார் தர்மிஷ்டர் என்று சொல்லப் படுப
வர்கள். இப்பகுதியார் ஸ்தலயாத்திரை, தீர்த்தஸ்நானம்,
பிராமணசமாராதனை போன்ற கைங்கரியங்களில் பரிதாப
ஜாதியாரின் உழைப்பைச் செலவிடக் கூடியவர்க
இந்தக் கைங்கரியங்கள் செய்வதால் போகிற கதிக்கு நல்
கதி கிடைக்கக்கூடியமகான் என்ற பட்டத்தைச் சிலசே
பேறிகளுக்குக் கொடுக்கப்படும். இவ்வினத்தைச் சே
தவர்கள் இப்படியே தங்கள் தங்கள் மனோபீஷ்டத்
யாதொரு கவலையுமில்லாமல் தாராளமாகப் பூர்த்திசெய்
கொள்வதில் பரிதாபஜாதியாரின் உழைப்பின் பலனை
யோகப் படுத்திக் கொண்டாலும், தங்கள் வருவாய்
மூலகருவியாக இருந்த பரிதாப ஜாதியாருக்குத் தானி
சொரிந்த அந்தக்காலத்திலும் அவர்களுடைய சேவல
மைக்கு விமோசனமில்லை.

பங்குனி, சித்திரை, வைகாசி இந்த மூன்றுமாத
ளும் மகசூல் முடிவடைந்த காலமாய் இருந்தாலும், பரித
ஜாதியார் வீட்டில் கால்படி நெல்லிற்கும் வழியிருக்கா
அதோடும் இந்தமூன்றுமாத காலமும், காற்படி, அரைப்
கிடைக்கக்கூடிய வேலையுள்ள காலமுமல்ல என்பன
சொல்லவேண்டியதில்லை. இம்மாதங்களில் வயிற்று
வழியில்லாமல் எலிவளை தோண்டுவதென்றபழக்கம்எல்ல
கிராமத்திலும் பரிதாப ஜாதியாரிடம் காணப்படும் ஒரு
தாரண சம்பவம். எலிகள் தங்கள் வயிற்று உணவுக்
திருடி வைத்திருக்கும் தானியங்களைப் பரிதாப ஜாதிய
தங்கள் பசிப்பிணியைத் தீர்த்துக் கொள்ள வெட்டி எ
பார்கள். இந்த வளைகள் பெரும்பாலும் வயற்கரைகளிலே
யே இருக்கும். எலிவளை தோண்டுவதிலும் பகிரங்கமாகத்
தோண்டுவதற்கு முடியாது. ஆண்டைமார்களுக்குத் தெரி
யாமல் இரகசியமாய்த்தான் வெட்டி எடுக்க வேண்டும்.
ஆண்டைமார்களுக்குத் தெரிந்து விட்டால் வயல்களையே
பறப்பயல்கள் வெட்டி நாசப்படுத்தி விட்டான்கள் என்ற

குற்றத்திற்கு உட்படும்படி ஏற்படும். எலிவளையிலிருக்கும் தானியத்தைப் பரிதாபஜாதியார்பசிக்கொடுமையால்வெட்டி எடுக்கிறார்கள்.

அவர்கள் உழைப்பை எல்லாம் இருப்புச் செய்து கொண்டு மேலே சொன்னபடி தங்கள் இஷ்டத்திற்குச் செலவு செய்து கொண்டிருக்கின்றோமென்று கருணை இல்லாமல் அவர்கள் செய்யும் அடாத செய்கையைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். பசிப்பிணியால் எலிவளை தோண்டும் பரிதாபகரமான காட்சியை ஈர இரக்கமில்லாத மிராசுதாரர்களோ, அல்லது அவர்களிடத்தில் கைக்கூலிவாங்கும் மணியாரன், கிராமத்தலையாரி போன்றவர்களோ அகஸ்மாத்தாய்க் கண்டுவிட்டால் கண்டவிடத்தில் கொடுக்கும் உதையோடு, ஆண்டை வீட்டு அடிவாசலில் கொண்டு நிறுத்துவார்கள். ஆண்டை வீடுஆனதால்அங்குக் கட்டிவைத்துச் செம்மையாக உதை கொடுக்கப்படும். இதோடாவது பசியால் வாடிநிற்பவனை விடுவார்களோ வென்றால் அதுதான் இல்லை. கரையை வெட்டிச்சேதம் விளைத்த நஷ்டத்திற்கு என்று சொல்லிக் குறிப்பிட்ட ஒரு தொகையை அபராதம் விதித்துப் பரிதாபஜாதியாரின் உழைப்பில் பிடித்து வைத்திருக்கும் வருமானத்தின் ஒரு பகுதியில் ஈடுசெய்து கொள்வார்கள். இப்படியே அவர்கள் வருமானத்தில் பெரும்பாகம் மிராசுதாரர்களால் சூறையாடப்படும். இம்மாதிரியானவாழ்வே, அவர்களின்வாழ்வு என்பது சர்வசாதாரணமாகக் காணப்படும் சம்பவமே அல்லாமல் மிகைப்படுத்திச் சொல்லியதல்ல. சுருங்கஉரைக்கின், தானியம் குவிந்தகோடையில் எலிவளை தோண்டுவதும், தானியம் குவிய வயல்களைப் பண்படுத்தும் ஆடையில் நண்டுவளை, நத்தை வளைகளே அக்கூட்டத்தின் உழைப்புக்குப் பலன் எனவும் அறிக.

## 16. நல்லபெயர் வைத்துக்கொள்வதும் பாவமாம்.

சர்வஜாதியார்களின் திருக்கண்களுக்கும் கள்ளனாய், கபடனாய், எத்தனையோ வம்ச பரம்பரையில் தீயனாய் இப்

பரிதாப ஜாதியார் காணப்பட்டு வந்தார்கள். பலதிறப்பட்ட அபிப்பிராய பேதத்திற்குரிய உயர் ஜாதியினர்கள், ஜாதி மாச்சரியம் தலைகொண்டு நிற்கும் உயர் ஜாதியினர்கள் இந்தப் பரிதாப ஜாதியாரைப் பொறுத்த மட்டில் ஒன்று சேர்ந்து செய்துவந்த கொடுந் துன்பங்கள்பல. அவர்களை அழைப்பதற்காவது நல்ல பெயர்களையாவது சூட்டிக் கொள்ள உரிமைகொடுத்தார்களா என்றால் அதுவும்இல்லை. அவர்கள் வயிற்றில் அடித்தார்கள்; அதுலாபத்தைக் கருதிச் செய்தார்கள் என்று சொல்லலாம். பரிதாப ஜாதியார் தங்கள் புத்திரபாக்கியங்களுக்கு நல்ல பெயர்வைத்து அழைப்பதில் கூடவாகல் நெஞ்சம்படைத்த மிராசுதாரர் களின் கண்ணை உறுத்தவேண்டும். "புருஷோத்தமன், வேங்கடாசலபதி, திருஞான சம்பந்தன், ஸ்வேதாரண்யம், வன்மீகலிங்கம், கிருபாநிதி, கிருத்திவாசன், வேதாந்தம், நடராசன்" போன்ற இம்மாதிரி பெயர்களைப் பரிதாபஜாதியாரிடையே காணவே முடியாது. இப்பெயர்கள் பரிதாப ஜாதியாரின் வாயில் கூட நுழையவே நுழையாதென்பது அவர்களின் ஆரம்ப நிலையை அறிந்தவர்களுக்குத் தெளிவாய்ப் புலப்படும். இம்மாதிரியான பெயர்களைத் தரித்துக் கொள்வதால் வரும்லாபமும் அப்பெயருக்குள்ள யோக்கியதையும் என்னவென்பது வேறு விஷயம். இப்பெயர்களை உயர்ஜாதி மிராசுதாரர்கள் என்னமோ பிரமாதமாய்க் கருதிக் கொண்டு பரிதாப ஜாதியார் தரித்துக் கொள்வதில் உலகமே மூழ்கிப்போய் விடுவதாய் நினைக்கிறார்கள். அவர்களுடைய மனப்பான்மையில் எவ்வளவு தூரம் பேதபுத்தி தாண்டவமாடுகிறதென்பதைக் காட்டவே இதை எழுத வேண்டியிருக்கின்றது.

இப்பெயர்களெல்லாம் உயர்ஜாதியாருக்குச் சொந்தமான கடவுளர்களுடைய திருநாமங்களாதலால், அப்பெயர்களைப் பரிதாப ஜாதியார் தரித்துக் கொள்வது மகா பாதகமென்கிறார்கள். அவர்கள் சொல்லும் இம்மகாபாத

கத்தை ஏற்றுக் கொள்ளப் பயந்து நடுங்கும் பரிதாப ஜாதி யார் தங்கள் சமூகத்தில் ஜனிக்கும்புத்திரபாக்கியங்களுக்கு வம்ச பரம்பரையாகச் சூட்டிக் கொண்டுவரும்பெயர்களைக் கேட்க மிகவிந்தையாகவே இருக்கும். தூண்டி, துடப்பக் கட்டை, தொண்டி, தாப்பாக்கட்டை, கட்டேரி,காட்டேரி துப்ளான், எலியன், பறட்டயன், முழியன், காத்தான், போன்ற பல பெயர்களே பரிதாப சமூகத்தில் வழங்கிக் கொண்டுவருவதாகும்.

தப்பித்தவறி சிலவிடங்களில் பொன்னுசாமி, ரெங்க சாமி, பெரியசாமி, சின்னசாமி என்னபோன்ற பெயர் கள் காணப்பட்டாலும் அப்பெயர்களை முழுதும் சொல்லி அழைக்க மிராசுதாரர்கள் சங்கோசப்படுவார்கள். தங்கள் பிரபல தத்துவத்திற்குப் பங்கம் வந்துவிட்டதாகக் கருது வார்கள். ஏனென்றால் அப்பெயர்களில் "சாமி" என்ற ஒரு வார்த்தை கலந்திருப்பதால்தான். மிராசுதாரர்களுக் கேற்பட்ட இந்த இடஞ்சலைத் தீர்த்துக்கொள்ளவும் வேண் டும்; ஆனால் பரிதாப ஜாதியாரை வேலைக்கழைக்க ஏதா வது ஒரு பெயரைக்குறிப்பிட்டு அழைத்தும் ஆகவேண்டும். ஆகவே சாமி என்ற பதத்தை எடுத்துவிட்டு, "பொன்னு, சின்னு, பெரியா, ரெங்கா," என்று அழைத்துக்கொள் ளும் மிராசுதாரர்களோடு கழுதை, நாய் என்ற செல்லப் பெயரை வைத்து அழைக்கும் மிராசுதாரர்களும் உண்டு. அல்லது ஏலே தூண்டி மகனே! ஏலே தாப்பாக்கட்டை மகனே! ஏலே துடப்பக்கட்டை மகனே! என்று தகப் பன் பெயரை வைத்து அழைத்துக்கொள்வதின் மூலம் சாந்தி செய்துகொள்ளும் மிராசுதாரர்களும் சிலருண்டு பரிதாப ஜாதியார் படும் பல்லாயிரக்கணக்கான அவஸ்தை களில் இதுவும் ஒன்று என அறியவும்.

## 17. விடுதலைக்கு வழியென்ன?

இதுவரையிலும் கூறியவற்றால், உழவுத்தொழில் செய்து உயிர்வாழும் நமது பரிதாபத்திற்குரிய பஞ்சமர்களின் உண்மை நிலையை உணரலாம். அவர்களுக்குக் குடியிருப்பதற்குச் சுகாதாரமான இடம் கிடையாது; குடியிருக்கும் ஆபாச இடத்திலும் நல்லகுடிசையாவது உண்டா என்றால் அதுவும் இல்லை? அவர்கள் செய்யும் வேலைக்குக் கொடுக்கப்படும் கூலியோ கொஞ்சம்; அக்கொஞ்சக் கூலியையும் மிரசுதாரர்களும், அங்காடிக்காரர்களும் கொள்ளையடித்து விடுகிறார்கள்; ஆடியிலும் ஐப்பசியிலும் அவர்கள் பாடுபட்டு வேலைசெய்யும் காட்சிபரிதாபக்காட்சியாகும்; இருந்தும் அவர்களுக்கு வயிறாரக் குடிப்பதற்குக் கஞ்சிகூடக் கிடைப்பதில்லை; தானியங்களை விதைத்து, விளைத்து, அறுக்கிறவர்களாயிருந்தும் உணவின்றித் திண்டாடுகிறார்கள்; ஆண் மக்கள் கோவணங்கூடச் சுத்தமானதாகக் கிடைக்க வழியில்லாமல் திண்டாடுகிறார்கள்; பெண் மக்களுக்கும் கந்தைத்துணி கிடைப்பதுகூட மகா கஷ்டம்; குடிப்பதற்கும், குளிப்பதற்கும், சரியான தண்ணீர் வசதியும் கிடைப்பதில்லை; ஆண்டைமார்கள் அவர்களைப் படுத்தும் கொடுமை ஒருபுறமிருக்க ஆச்சிமார்கள் படுத்தும் கொடுமையும் அளவற்றவை; அவர்கள் தங்கள் ஆண்டை மார்களிடம் கடன் வாங்கிக் கல்யாணஞ்செய்து கொள்வதின் மூலமே அடிமைப்பட்டு விடுகிறார்கள்; பஞ்சமப் பெண்கள் பிள்ளைப்பேறு காலத்தில்படும் கஷ்டமும் சொல்லுந்தரமன்று; ஆரம்பக் கல்வி கூட அவர்களுக்குச் சரியாகக் கற்றுக் கொடுக்கப்படுவதில்லை; அவர்களுடைய முன்னேற்றத்திற்காக ஏற்பட்டிருக்கும் "லேபர் டிபார்ட்மெண்டும்" மிராசுதாரர்களின் சூழ்ச்சியினால் பஞ்சம சமூகத்தின் நன்மையைச் சரியாகக் கவனிப்பதில்லை; இத்தகைய பரிதாப நிலையில் உள்ள அவர்களிடமும் பலஜாதி வேற்றுமைகள் இருந்து

கொண்டு அவர்களை ஒன்றுசேர வொட்டாமல் செய்கின்றன; கோடை காலத்தில் எலிவளை தோண்டியும், ஆடை காலத்தில் நண்டு நத்தை பிடித்துமே வாழ்க்கை நடத்த வேண்டியவர்களா யிருக்கிறார்கள்; இச்சாதியார் காதுக்கினிமையான நல்ல பெயர்கள் வைத்துக் கொள்வதைக் கூடமேல் ஜாதியார் வெறுக்கிறார்கள், என்ற விஷயங்களை யெல்லாம் நினைக்கும் போது எந்தக்கல் நெஞ்சமுடைய வனும்இவர்களிடம் பச்சாதாபப் படாமலிருக்க முடியாது.

இத்தகைய நிலையில் இன்னும் மனிதக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்களா? என்றுகிராம வாழ்க்கையை அறியாதவர்கள் ஆச்சரியப் படலாம். இத்தகைய நிலைமாத்திரமல்ல, இன்னும் கஷ்டமான நிலையிலும் சிலவிடங்களில் இருக்கிறார்கள் என்பதைக் கிராமவாசிகள் நன்கறிவார்கள். மேலே கூறிய விஷயங்களில், சிலசில ஜில்லாக்களில் சிலகூடியும், சிலகுறைந்தும் இருக்கலாம். நாகரீகம் பெற்ற தஞ்சை ஜில்லாவில்கூட மேலே கூறிய நிலையில் கொஞ்சங்கூட மாறுதல் இல்லாமல் சில தாலுக்காக்களில் இருந்து வருகின்றன. ஆதலால் இவைகளைக் கற்பனையென்றோ, மிகைப் படுத்திக் கூறியன வென்றோ நினைக்க வேண்டாம்.

இத்தகைய பரிதாபத்திற்குரிய பஞ்சமர்கள் இப்பொழுது சிறிது சிறிது உணர்ச்சி பெற்றுத் தங்கள் நிலையை உணர்ந்து வருவது ஒருவாறு அவர்களுடைய எதிர்காலம் சுகமுடையதாக இருக்கலாம் என்ற நம்பிக்கைக்குச் சிறிது இடமளிப்பதாக இருக்கிறது. ஆயினும், தம்மைப் பிறர் கைதூக்கிவிடுவார்கள் என்று எதிர்பார்த்திருக்கும் வரையிலும் அவர்கள் பாடு திண்டாட்டம் தான். "ஹரிஜன முன்னேற்றம்" "ஆதிதிராவிடர்கள் விடுதலை" என்றெல்லாம் பேசும் இராஜீய வாதிகளின்

பேச்சை நம்பி அவர்களுக்குப் பக்கத்துணையாயிருப்ப தோடு மாத்திரம் நின்று விடுவார்களானால் இவர்கள் சமூகம் முன்னேறி விடாது. இதுபடித்தவர்கள் சிலருடைய சுயநலத்திற்கு மாத்திரம் சாதகமாக இருக்கலாமே தவிர வேறில்லை.

உண்மையில் பஞ்சம சமூகம் விடுதலை பெறவேண்டுமானால், அவர்கள் தம்மைத்தாமே நம்பவேண்டும். முதலில் தமக்குள் உள்ள பிளவுகளை நீக்கிக் கொண்டு ஒற்றுமையடைய வேண்டும். கல்வி, சுகாதாரம் முதலியவைகளில் பயிற்சி பெற்றுக் கொள்ள வேண்டும். அடிமைச் சாசனங்களைக் கிழித்தெறிந்து சுயேச்சையுடையவர்களாக முதல் முதலில் முயற்சி செய்ய வேண்டும். தங்கள் அடிமைத் தன்மையைப் போக்கிக் கொண்டு சுதந்தரம் பெற்ற சமூகமாக வாழமுயற்சிக்க வேண்டும்.

தேசத்தில் உணவுப் பொருள்களையேஉற்பத்திசெய்து கொடுக்கும் ஒரு சமூகம், "கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை" என்ற பழமொழிக்கு இலக்காக உணவுக்குக் கூட வழியின்றித் தவிப்பதென்றால் அது நமது தேசத்திற்கே அவமான மல்லவா? மனித சமூகம் என்று சொல்லுவதற்கே இடமில்லாமல் ஒரு கூட்டம் வாழ்ந்திருக்கும் தேசத்தைப் பற்றி நாகரிகம் பெற்ற தேசத்தினர் என்ன நினைப்பார்கள்?

இத்தகைய நிலையில் அச்சமூகம் இருப்பதற்குக் காரணம் உயர்ஜாதியினரின் கொடுமை என்றாலும், இன்னும் அதைச் சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. எவ்வகையிலேனும் உயர்ஜாதியினரின் கொடுமைகளை உதறித் தள்ளி விடுதலை பெற முயற்சிப்பது அச்சமூகத்தின் உணர்ச்சியைப் பொறுத்த விஷயமே என்பதை மறந்து விடுதல் கூடாது.

முதலில் தாழ்த்தப் பட்டிருக்கும் இச்சமூகத்தினரின் மனதில் மாற்றம் ஏற்பட வேண்டும். அவர்களிடம் இப்பொழுதுள்ள அடிமைப் புத்திமாறித் தொலையவேண்டும். "என்னமோ நம்மை ஆண்டவன் இப்படிக் கஷ்டப்படும் படிபடைத்து விட்டான்; பூர்வஜென்மத்தில் செய்த பாவத்தினால் இப்படிச் சண்டாளனாக"ப்பிறந்து கஷ்டப்படுகிறோம் அன்று எழுதினவன் அழித்தெழுதப் போவதில்லை; பூர்வ ஜென்ம புண்ணியத்தால் மற்றவர்கள் நமக்கு எஜமானர்களாகப் பிறந்திருக்கிறார்கள். அதனாலேயே நம்மை அவர்கள் அடிமைப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நாம் ஆண்டைமார்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்கவேண்டும்; அவர்கள் வார்த்தையைத் தட்டிப் பேசக் கூடாது; அவர்கள் இட்டவேலைகளைச் செய்வது தான் நாம் கடைத் தேறும் வழி" என்று நினைத்துக் கொண்டிருக்கும் தாழ்த்தப் பட்ட சகோதரர்கள் இன்னும் இருக்கிறார்கள். இந்தமாதிரியான மனப்பான்மை எந்தச் சமூகத்திலிருந்தாலும் அந்தச் சமூகம் பாதாளப் படுகுழியில் கிடக்க வேண்டியது தான்.

"நாமும் மக்கள்; எல்லோரைப் போல நமக்கும் அறிவுண்டு; எல்லோருடைய சரீர அமைப்பைப் போலவே நம்முடைய சரீர அமைப்பும் இருக்கிறது; நாமும் மற்றவர்களைப் போலவே உழைக்கிறோம்; அப்படியிருக்க நாமேன் உழைப்பிற்குத் தகுந்த பலனைக் கூட அனுபவிக்க முடியாமல்கஷ்டப் படவேண்டும்" என்றஎண்ணத்தைஉறுதியாகக் கொள்ள வேண்டும். இவ்வெண்ணமே சுதந்தரத்துக்குவழி திறப்பதாகும்.

இன்னும் தாழ்த்தப் பட்ட மக்களிடம் உள்ள மூட நம்பிக்கைகள் ஒழிய வேண்டும். காட்டேரி, கறுப்பன், காத்தான், தீத்தான், மாடன், காடன், முனியன், இருளன் என்ற தெய்வங்கள் பெயரைச் சொல்லிக் குடித்துக் கூத்

தாடும் வழக்கங்களை யெல்லாம் விட்டுவிடுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த விதமான பூசைகளும், இவற்றின் மூலம் உண்டாகும் குடி வகைகளும் ஒழிந்து விடுமானால் அவர்களுடைய தரித்திர நிலைமையில்கூட கொஞ்சம் மாறுதல் ஏற்படக் கூடும். இவ்வகையில் செலவாகும் பொருளைக் கொண்டு கொஞ்சம் நல்ல ஆடைகளை யாவது வாங்கித் தரித்துக் கொள்ளலாம். பொதுவாக அவர்களிட மிருக்கும் மூட நம்பிக்கைகள் ஒழியுமானால் பொருளாதாரத் துறையில் கொஞ்சம் முன்னேற்ற மடைவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆகவே இவ்விஷயங்களை யெல்லாம்தெரிந்து சிறந்த வழியில் நடந்துகொள்ள வேண்டியது தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் முயற்சியையும், கிளர்ச்சியையும் பொறுத்ததாகும். நாட்டின் முன்னேற்றத்தில் கருத்துள்ளவர்களும், தாழ்த்தப் பட்டவர்களிடத்தில்அனுதாப முள்ளவர்களும் இவைகளை யெல்லாம் அவர்களுக்கு எடுத்துக் காட்டி அவர்கள் முன்னேறும் வழியைத் தெரிவிக்க வேண்டியது முதன்மையான கடமையாகும்.

## சிதம்பரனார்
## சீர்திருத்தப் பாடல்கள்.

(முதற்பாகம்.)

அறிவையும், உணர்ச்சியையும் ஊட்டும் இனிய, எளிய செந்தமிழ்ப் பாடல்கள்.

அறிவுப்பகுதி, ஒற்றுமைப் பகுதி, புரோகிதப்பகுதி. பாட்டாளர்பகுதி. மாதர்பகுதி, மதப்பகுதி, என ஆறு பகுதிகள் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன.

**100 பக்கங்கள் அடங்கிய இப் புத்தகத்தின் விலை அணா 4**

உள்நாட்டுக்குத் தபாலில் அனுப்ப வேண்டுமானால் 5 அணா அனுப்ப வேண்டும். வெளிநாட்டினர் 6 அணா அனுப்பவேண்டும்.

**சொற்ப பிரதிகளே அச்சிடப் பட்டுள்ளன.**

மானேஜர் "அறிவுக்கொடி"

கும்பகோணம்.